# சென்னையில் நாவலருக்குச் சிலை; அண்ணு சம்மதம்

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தொலைபேசி எண். 49 · தபால் 389

National Tamil Daily

மலர் 9 · இதழ் 332 · தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க மார்கழி 26 ஷவ்வால் 9 புதன்கிழமை [10-1-68]

## ரூ. 15,000 திரட்டித்தரவேண்டும்

— நமது நிருபர் கே. நடராசா —

சென்னை, ஜன 9

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை நகரில் தமிழுக்கும் சைவத்துக்கும் அளப்பரியதொண்டுபுரிந்த நாவலர் பெருமானின் உருவச் சிலை நிறுவ தமிழக முதலமைச்சர் திரு சி. என் அண்ணுதுரைசம்மதம் தெரிவித்திருக்கிருர்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு தம்பையா, திரு. ஆர். நமசிவாயம் ஆகியோரைக் கொண்ட தூதுகோஷ்டியொன்று திரு. அண்ணுதுரையைச் சந்தித்து நாவலருக்குச் சிலை எடுக்க தவறியது பற்றியும் இனி யாவது சிலை எடுக்கவேண்டியது அவசியம் என்றும் வற்புறுத்தியது,

இத்தூதுகோஷ்டிக்குப் பதிலளித்த திரு. அண்ணுதுரை, சென்னையில் நகரில் நாவலருக்குச் சிலை எடுப்ப

(8-ம் பக்கம் பார்க்க)

# தமிழில் பொதுக் கலைச்சொல் தயாரிக்க கூட்டுக் குழு

## தமிழக அரசு நியமிக்கும்; நெடுஞ்செழியன் தகவல்

### இலங்கை-தமிழகம் பரஸ்பரம் நூல்கள் அன்பளித்த வைபவம்

சென்னை, ஜன. 9



உலக நாடுகளில் வாழும் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் பயனளிக்கக் கூடிய விஞ்ஞான, தொழில்நுட்ப பொதுக்கலைச் சொ லாக்கத்துக்கான பணியில் ஈடுபடுவதற்கு கூட்டுக்குழு ஒன்றை நியமிக்க தமிழக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது. இந்தமுயற்சி சம்பந்தமாக இலங்கை, மலேசியா ஆகிய அரசாங்கங்களுடன் தமிழக அரசாங்கம் கடிதத் தொடர்பு கொண்டிருக்கிறது.

இத்தகவலை தமிழக கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தீவுத்திடலில் பூம்புகார் நகரில் நேற்று நிகழ்ந்த ஒரு வைபவத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

### 16 இலங்கைத்தமிழ்நூல்களும் 166 தமிழக நூல்களும்

இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் நிகழ்ச்சிகள் பல நடைபெறும் தீவுத்திடலில் அமைந்துள்ள பூம்புகார் நகரில் இலங்கையில் வெளியிடப்பட்ட 16 தமிழ்நூல்களை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம், தமிழக கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியனிடம் நேற்று மாலை கையளித்தார் இந்த நிகழ்ச்சியில் பேசும் போதுதான் பொதுக்கலைச் சொல்லாக்கத்துக்கு கூட்டுக் குழு நியமிக்கவிருப்பது பற்றி திரு. நெடுஞ்செழியன் தெரிவித்தார். இலங்கை அரசாங்கத்தின் அன்பளிப்புக்குப் பதிலாகத் தமிழகத்தில் வெளியிடப்பட்ட விஞ்ஞானம், பொருளாதாரம், அரசியல் சம்பந்தப்பட்ட 166 தமிழ் நூல்களை அமைச்சர் திருச்செல்வத்திடம், தமிழக அரசின் சார்பில் திரு. நெடுஞ்செழியன் கொடுத்தார்.

இவ்வைபவத்தில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கமும் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினர்.



## இலங்கையில் தமிழர் நடத்தும் போராட்டம்

### பூம்புகார் நகரில் திரு. அமிர்தலிங்கம்



இலங்கையில் தமிழ் மக்கள் தமது உரிமைக்காகத் தொடர்ந்து போராடி வந்துள்ளார்கள். உரிமை கிடைக்கும் வரை அவர்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருப்பார்கள் எனவட்டுக்கோட்டை எம். பி திரு ஏ. அமிர்தலிங்கம் அமைச்சர் திரு. எம். திரு செல்வம் தமிழக அரசாங்கத்துக்கு ஈழத்து தமிழ் நூல்களை பூம்புகார் நகரில் அன்பளிப்புச் செய்த வைபவத்தில் பேசுகையில் எடுத்துக் கூறினர்.

16 ஈழத்து தமிழ் நூல்கள் தமிழக அரசாங்கத்துக்கு உள்ளூராட்சி அமைச்சரால் அன்பளிப்புச் செய்யப்பட்டபோது தமிழக அரசாங்கசார்பில் விஞ்ஞான தொழில் நுட்பத்துறை சம்பந்தப் பட்ட 160 தமிழ் பாடப்புத்தகங்கள் அமைச்சர் திரு. திருச்செல்வத்திடம் அன்பளிப்புச் செய்யப்பட்டன. தமிழக கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் இதனைக்கையளித்தார்.

இந்த வைபவத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது

தாமும் இம்மகாநாட்டில் [உலக தமிழாராய்ச்சி மகாநாடு] பிரதிநிதித்துவம் செய்யப்படுவது கண்டு 25 லட்சம் ஈழத்தமிழர்கள் பெருமைப் பூரிப்படைகிருர்கள்

தென்னகத்துத் தமிழரையும் ஈழத்துத்தமிழரையும் கடல் பிரித்தாலும் மொழி சேர்த்துக் கொண்டிருக்கிறது, இருதயத்தால் அவர்கள் இணைந்துள்ளார்கள். இரு நாட்டினருக்கு மிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்

(8-ம் பக்கம் பார்க்க)

## 'தரமான மொழிபெயர்ப்பு அகராதி உருவாகவேண்டும்'

### திருமதி மகேஸ்வரியின் கருத்துக்கு பெரும் வரவேற்பு

ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிபெயர்க்கப்படும் போது, மொழிபெயர்ப்புக்கள் ஒரே சீராக அமைவதற்கு ஒருதமிழ்மொழிபெயர்ப்பு அகராதி உருவாக்கப் படவேண்டும். இத்தகைய ஒரு அகராதியை உருவாக்க குழுவொன்று நியமிக்கப்படுவது அவசியம்' எனதமிழாராய்ச்சி மகாநாட்டுக்கான பூர்வாங்க மகாநாட்டில் இலங்கையின் ஏகப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன் தீவுத் திடலில் பூம்புகார் அரங்கில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமிழாராய்ச்சி மகாநாட்டின் கருத்தரங்கில் பேசுகையில் எடுத்துக் கூறினர்.

இந்த வைபவத்தில் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தமிழ்மொழிபெயர்ப்பு சம்பந்தமாக தமது கருத்தைத் தெரிவிக்கையில் ஆங்கிலமொழியிலிருந்து தமிழ் மொழிபெயர்ப்பு சம்பந்தமாகவும் வேறு பிறமொழிகளிலிருந்து தமிழ்மொழிபெயர்ப்பு சம்பந்தமாகவும் ஆய்ந்து ஏற்ற தமிழ்மொழிகளை உபயோகிப்பதற்கு வழிவகுக்குமுகமாக தமிழக அரசாங்கம் ஒருகூட்டுக்குழுவை நியமிக்க உத்தேசித்துள்ளது. இதற்கான ஒழுங்குகள் மேற்

[8-ம் பக்கம் பார்க்க]



## தருமையாதீன வித்துவான்

காரைநகர், புதன்

காரைநகர் மாணிவாசக சபையார் ஆதரவில் காரைநகர் சிவன்கோவிலில் இன்று மாலை 6 மணிக்கு மணிவாசகர் விழாவை மதுரையாதீன செஞ்சொற்கொண்டல் தருமையாதீன வித்துவான் சொ. சிங்காரவேலன் ஆரம்பித்துவைக்கிருர்.

வருகிற 24-4-68-இல் நடைபெற இருக்கும் மாணவ ஆசிரியர் பரீட்சைக்குரிய 'பொது அறிவும்-உள்ளூர் அறிவும்' மாதிரி வினக்களை 6-ம் பக்கத்தில் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

3/4'' — 1/2'' கலவன் கருங்கல்லுக் கிறசர் சல்லி —கொங்கிறீற்றுக்கு உகந்தது தற்போது. மதவாச்சி கிரேசன் அருகாமையில் கிடைக்கும். 2057

**வீடும் வளவும்**

யாழ்ப்பாணம், 39, ஸ்ரான்லி வீதியிலுள்ள வீடுவளவு விற்பனைக்குண்டு. வியாபாரத்திற்குஉகந்தது. தொடர்பு கொள்ளவும். 9. கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. 2060

**கண்ணாடி சோக்கேஸ்கள்**

தேக்கினால் செய்யப்பட்டது. 6 அடி நீளம்; 4 அடி நீளம், 7 அடிஉயரம் முதலிய அளவுகளில் உண்டு நேரில் பார்வையிடலாம். 37, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2058

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் 3 பரப்புக் காணி கடையுடன் வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு 10-1-68 அல்லது 11-1-68 பிற்பகல் ஆஸ்பத்திரி வீதி, 356-ம் இலக்கத்தில் விசாரிக்கவும். 2059

சந்தோர் அறை, இரண்டு அறை தண்ணீர் வசதிகளுடன் நல்லூர் வடக்கிலிருக்கும் சங்கிலியன் வீதியில் உண்டு. நல்லூர்க் கோவிலிலிருந்து சுமாராக 600 யாருக்குள் உள்ளது. வளவுபிரயோசனம் உண்டு. விபரங்களுக்கு திரு. வ. சி. பொன்னையாபிள்ளை, 159, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2047

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

### தேவை

**தொழிலாளர்**

மரம் தறிக்கவும் துண்டு போடவும், தளபாடங்கள் செய்யவும், கல் அரியவும், பாறை கல் முதலியன உடைக்கவும், தெருக்கள் போடவும் கட்டட வேலை கள் செய்யவும் தொழிலாளிகள் தேவை. துண்டு வேலைக்கணக்கில் சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். எச். எம். ஆசீர்வாதம், ஊவா குடா-ஓயா, வெல்லவாயா மாவட்டம், அம்பாந்தோட்டையிலிருந்து 35 மைல். 2049

### கல்வி

**பரீட்சை**

மாணவ ஆசிரிய பரீட்சை 1968 விண்ணப்பப் படிவங்களுக்கு 5 சதத்துச் சதமுத்திரையுடன் விண்ணப்பிக்கவும். வகுப்புக்களும் நடாத்தப்படும். வர்த்தகக் கல்வி நிலையம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 2021

**வகுப்புகள்**

யாழ் கல்லூரி. தட்டெழுத்து, சுருக்கெழுத்து தமிழில், ஆங்கிலத்தில், கணக்கு பதவியல் ஆங்கிலம், சிங்களம். ஜி. சி. இ. கலை, விஞ்ஞானம், வர்த்தகம் தினசரி காலை மாலை வகுப்புகள் உடனே சேரலாம். - 426, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம். 2055

**வகுப்புகள்**

பெண்கள் மட்டும் தட்டெழுத்து சுருக்கெழுத்து. தமிழில் ஆங்கிலத்தில். ஆங்கிலம், சிங்களம் ஜீ. சி. இ. விஞ்ஞானம் கலை வர்த்தகம், தினசரி காலை மாலை வகுப்புகள் உடனே சேரலாம், யாழ். கல்லூரி, பெண்கள் கிளை, 29, பருத்தித்துறை ரோட், யாழ்ப்பாணம். 2056

### இலவசம்!

மில்க்வைற் சோப் 72 கட்டிகள் கொண்ட மேல் உறைகள் 100 சேகரித்து தரும் விற்பனையாளர்களுக்கு ஓர் அழகான 'லித்தோ' வர்ணப்படம் அன்பளிப்பாக வழங்கப்படும். மில்க்வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். போன்: 7233. 1907

### தவறிவிட்டது

காரைநகர், பருத்தித்துறை பஸ்களில் பிரயாணம் செய்தபோது சங்கிலியுடன் லேடீஸ் கைக்கடிகாரம் ஒன்றுதவறிவிட்டது. பின்வரும் விலாசத்தில் ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் சோ. சபானந்தன், சந்தை வீதி, உடுப்பிட்டி, 2053

## மூதாட்டியின் கண்தானம்

கொழும்பு, செவ்.

102 வயதில் காலமான ஏச். டி. ஹிடோநோனு என்பவர் தமது கண்களைத் தானம் செய்துள்ளார்.

இவருக்கு 42 பூட்டன்மார்களும் 4 கொப்பாட்டன்மார்களும் இருக்கின்றனர்.

இவரது கண்களும் வேறு ஆறு கண்களும் கராச்சிக்கு இலங்கை கண்தான சங்கத்தினால் அனுப்பப்பட்டுள்ளது.

## நோயாளிகள் கஷ்டம்

முல்லைத்தீவு, செவ்.

முல்லைத்தீவு அரசினர் ஆஸ்பத்திரியில் உள்ள அம்புலன்ஸ்வண்டி சென்ற ஒரு மாத காலத்துக்குமேல் பழுதடைந்து கவனிப்பாரற்றுக் கிடப்பதால், கடும் நோயாளிகளை 90 மைல்களுக்கப்பாலுள்ள யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்ப முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

## இந்திய ஹைகமிசனர்

கொழும்பு, செவ்.

இந்திய ஹைகமிஷனர் திரு. வை. டி. கண்டேவியா நேற்று இந்தியாவுக்கு பயணமானார். திரு. கண்டேவியா இம்மாதம் 13-ந் திகதி இலங்கை திரும்புவார்.

திரு. கண்டேவியா அங்கு தங்கியிருக்கும்போது உதவி ஹைகமிஷனர் திரு. பி. எஸ். கோதா சன் ஜானி அவரது கடமைகளைச் செய்வார்.

**REGAL** JAFFNA
4-40, 7-00 & 9-45 p.m.
Joan Crawford &
Diane Bakes
in
STRAIT JACKET
(adults only)

**MANOHARA**
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
Warren Beatty
Susannah york
in
KALIEDASCoPE
(Techinicolor)

**நியூ காலிங்கள்**
(இணுவில்)
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
முத்துராமன்-பாரதி

## நோய் தாங்காமல் தற்கொலை

யாழ்ப்பாணம், புதன்

20 வருடங்களாக தொய்வுநோயினாலும் பின்னர்காசநோயினாலும்தீராத கஷ்டத்தையும் வேதனையையும் அனுபவித்துக் கொண்டிருந்த முதியவர் ஒருவர்கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்ட சம்பவம் சுண்டிக்குளியின் கொழும்புத்துறை வீதிக்கருகாமையில் நடந்தது.

சம்பவம் நடந்த முதல் நாள் இறந்தவரான 75 வயதான வேலுப்பிள்ளை சிவக்கொழுந்து தொய்வு காசம் நோய்களினால் மிகவும் வேதனையடைந்து கொண்டிருந்தாரெனவும் அதன் காரணமாக அவர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு ஊசிபோடப்பட்ட பின்னர் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டு அவரது படுக்கையில் வழக்கம்போல் படுத்துக் கொண்டாரென்றும் அடுத்த நாள் விடியற்காலை கமலா என்ற பெண்கிணற்றடிக்குத் தண்ணீர் அள்ளப்போன சமயம் இறந்தவர் கிணற்றில் கிடக்கக் காணப் பட்டாரென்றுப் இறந்தவரின் மகள் மரண விசாரணையின் தெரிவித்துள்ளார்

மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். [வி. நி]

## மீண்டும் 6ம் வகுப்பு

உடுப்பிட்டி, செவ்.

மீண்டும் ஆறும் வகுப்பை நடாத்துமாறு பெற்றோர் விடுத்தவேண்டுகோள் பயனளித்துள்ளது. நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் கடந்தவருடம்வரை ஆறும்வகுப்பு இயங்கி வந்ததாகவும் இவ்வருடம் ஆறும்வகுப்பிலுள்ள மாணவர்கள் அனைவரும் ஏழாம் வகுப்பிற்கு உயர்த்தப்பட்டதாகவும், அரசாங்கம் ஆறும்வகுப்பை இனிமேல் நடாத்த வேண்டாமெனக் கல்லூரி அதிபருக்கு அறிவித்ததாகவும் இதனைத்தொடர்ந்துஇப்பகுதிப் பிள்ளைகளின் கல்விபாதிக்கப்படுமென அஞ்சிய பெற்றோர் மீண்டும் தொடர்ந்துஆறும் வகுப்பை ஆரம்பிக்க வேண்டுமெனவும் ஆறும்வகுப்பை நிறுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கல்விப்பகுதிக்கு முறையிட்டதாகவும் அறியப்படுகிறது.

இது சம்பந்தமாகப் பெற்றோர்களின் கோரிக்கையை ஏற்ற கல்விப்பகுதியினர் வழமைபோல் மீண்டும் வித்தியாலயத்தில் ஆறும் வகுப்பை ஆரம்பிக்குமாறும் கல்லூரிஅதிபருக்கு அறிவித்துள்ளனர். இவ்வகுப்பில் சேர்வதற்காக 80 பிள்ளைகள் மனுச்செய்துள்ளதாகவும் தெரிகிறது.

## 2 மாத அலவன்ஸ் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், புதன்

பரந்தனிலுள்ளடிராக்டர் பயிற்சி நிலையத்தில் 8 மாதப் பயிற்சி அளிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டமாணவர்களுக்கு கடந்த 2 மாத காலமாக நாளொன்றுக்கு 2 ரூபாய் வீதம் வழங்கப்படும் அலவன்ஸ் சம்பளப் பணம் வழங்கப்படவில்லையாம். பயிற்சிக்குப்போன முதல் மாதம் இந்த அலவன்ஸ் பணம் வழங்கப்பட்டது. கடந்த வருடம் ஆவணி மாதம் இவர்கள் பயிற்சிக்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். இவர்களது பயிற்சிக்கென ஒரு டிராக்டர் மட்டுமேயிருப்பதால் நல்ல பயிற்சி பெறமுடியாத நிலையில் இந்த மாணவர்கள் இருக்கிறார்களாம், (நி)

## விளம்பரம்

### அறிவித்தல்

**சோலைவரி**

**நகரசபை வவுனியா**

இந்நகரசபை எல்லைக்குள் இருக்கும் ஆதனங்களால் சபைக்குச் சேரவேண்டிய சோலைவரிகளை உரிய தவணைகளில் ஆதனச் சொந்தக்காரர்கள ல செலுத்தப்படாமல் இருப்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது இவ்வரிகளை முறையே அறவாக்கும் நோக்குடன் மாநகர சபையின் வரி வசூல் சட்டம் அனைத்தையும் முறையே அமுல்செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இச்சட்டம் அமுல்செய்யப்படும் இடத்து வரி செலுத்தத் தவறிய ஆதனங்களில் வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ இருப்போரது அசைவுள்ள பொருட்கள் யாவும் சபையின் அதிகாரம் பெற்ற நடுக்கட்டல் அதிகாரிகளால் நடுக்கட்டல் செய்யப்பட்டு பகிரங்க ஏலவிற்பனையில் இடம்பெறக்கூடும். எனவே வாடகைக்கோ, குத்தகைக்கோ இருப்போர் யாவரும் தாங்கள் குடியிருக்கும் ஆதனங்களின் வரிகள் யாவும் சொந்தக்காரர்களால் முறையே செலுத்தப்பட்டுள்ளனவா என ஆராய்ந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

ம. பொன்னையா,
தலைவர்.
நகரசபை, வவுனியா.

நகரசபை அலுவலகம்,
வவுனியா, 5-1-1968.

401

## சனசமூகநிலைய உறுப்பினர்

சுன்னாகம், செவ்வாய்

சுன்னாகம் வடக்கு சனசமூக நிலைய வருடாந்தக் கூட்டம் தலைவர் திரு. சு. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட உத்யோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் சி. யோகநாதன், உப தலைவர் திரு க. மகேந்திரன், காரியதரிசி திரு. மா. பாலசுப்பிரமணியம், உப காரியதரிசி திரு. இ. ஏகாம்பரம், தனாதிகாரி திரு. இ. கதாதரன். நிலைய பொறுப்பாளர்கள் திருவாளர்கள் சு. சிவலோகநாதன் க. கருணைநாயகம்.

## உருளைக்கிழங்கு செய்கை

அராலி, செவ்வாய்

அராலி வட்டுக்கோட்டைப்பகுதிகளில் உருளைக்கிழங்குச் செய்கையாளர் உருளைக்கிழங்கு பயிரிட நிலங்களைத் தயார் செய்து வருகிறார்கள்.

பீடிப்புகையிலைச் செய்கை மூலம் நல்ல பயனடையாத காரணத்தால் இவ்வாண்டு புகையிலைச்செய்கை இப்பகுதிகளில்பெருமளவில் நடைபெறமாட்டாதெனத் தெரியவருகிறது. அதற்குப் பதிலாக உப உணவுச்செய்கையில் விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

## பிரிவுபசாரம்

ஊர்காவற்றுறை, செவ்.

ஊர்காவற்றுறைஅரசினர் வைத்தியசாலையில் மருத்துவத் தாதியாகக் கடமையாற்றிய திருமதி புஷ்பம் குறூஸ் சிலாபத்துறை அரசினர் ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதையொட்டி அன்னாருக்கு ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி சேவையாளர்கள் பிரியாவிடை விருந்தளித்தனர்.

2-வது வெற்றிவாரம்

கிங்ஸ்லி (கொட்டாஞ்சேனை)
பிளாஸா (கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
மொரேர்ன் (பதுளை)
விஜிதா (ஹட்டன்)



சுந்தரராஜன்
ஏ.வி.எம் ராஜன்
முத்துராமன்

ஜெயலலிதா
நாகேஷ்
மற்றும்
பலர்
நடிக்கும்



மேஜர் சந்திரகாந்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலும் ஜோர்தானும் மோதின

## இஸ்ரேல் விமானம் சுடப்பட்டது: 4 டாங்கிகளும் நாசம்

அம்மான், ஜன. 9

இஸ்ரேலிய துருப்புக்களும், ஜோர்தான் துருப்புக்களும் புதிய மோதல்' ஒன்றில் நேற்று ஈடுபட்டன.

இஸ்ரேலிய விமானமொன்று சுடப்பட்டதாகவும் 4 இஸ்ரேலிய டாங்கிகள் நாசமாக்கப்பட்டதாகவும் ஜோர்தான் வட்டாரங்கள் தெரிவித்தன.

விமானம் ஒன்று சுடப்பட்டதுஎன்பதை இஸ்ரேல் மறுத்துள்ளது.

இஸ்ரவியத் துருப்புகள் பலத்த சேதமடைந்ததாக ஜோர்தான் தெரிவித்துள்ளது. எட்டு ஜோர்தானிய வீரர்கள் காயமுற்றதாகவும், இவர்களில்மூவருடைய நிலை மோசமடைந்துள்ளதாகவும் அது மேலும்அறிவித்தது.

இந்தச் சண்டைபற்றிஇஸ்ரேல் ஐ.நா.வுக்குப் புகார் செய்துள்ளது. இருசாராரும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இப்போது சண்டைநின்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்ரேல் பாதுகாப்பில் அமெரிக்க கவனம்

## ஜோன்சன் உறுதி !

டெக்ஸாஸ், ஜன. 9

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சனும், அமெரிக்காவுக்கு வந்துள்ள இஸ்ரேலியப் பிரதமர் திரு. எஷ்கோலும் இங்கு பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர்.

இஸ்ரேலிய பாதுகாப்புத் தேவைகளை அமெரிக்கா தீவிரமாகவும், அனுதாபமாகவும் கவனித்து வருவதாகத் திரு. ஜோன்சன், திரு. எஷ்கோலிடம் உறுதியளித்துள்ளாராம்.

### ஏமன் குடியரசு

சானா, ஜன. 9

ஏமன் குடியரசு, முடியரசுவாதிகளின் தாக்குதலினால் நெருக்கடியான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏமனிய முடியரசு வாதிகளுக்கும், ஆளும் குடியரசு வாதிகளுக்குமிடையே கடும் சண்டை நடைபெற்றுவருவது தெரிந்ததே.

# பிரிட்டிஷ் 'பிரதமரின் ரஷ்ய அமெரிக்க விஜயம்

லண்டன், ஜன. 9

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன், அடுத்த மாதம் 8-ம் 9-ம் திகதிகளில் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சனை சந்தித்துப் பேசுவாரென இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர், அமெரிக்கா செல்லமுன், மாஸ்கோவுக்கு விஜயம் செய்து, சோவியத் பிர



தமருடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ்

### வெளியுறவு மந்திரி] ஜப்பான் வந்தார்

டோக்கியோ, ஜன. 9

பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. ஜோர்ஜ் பிரவுண் ஜப்பான் வந்து சேர்ந்துள்ளார்.

அவர் ஜப்பானியப் பிரதமருடன், வடவியட்னாமின் சமீபத்தைய சமாதான அறிவிப்புப்பற்றிப் பேசுவாரெனத் தெரிகிறது.

# தமிழரசு எம். பி. க்கள் கல்முனைக்கு படையெடுப்பு

குரும்பசிட்டி, செவ்.

கல்முனை இடைத்தேர்தல் பிரசார வேலைகளில் கலந்து கொள்வதற்காக தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் ஆகியோர் புகையிரத மூலம் கிழக்கு மாகாணம் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இவர்கள் நாளை கல்முனை போய்ச் சேர்வார்களென்றும் மறுநாள் தமிழரசுக் கட்சிச்சார்பில் போட்டியிடும் ஜனாப் மசூர் மௌலானா தமது நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்யும் போது கூட பிரசன்னமாயிருப்பார்களென்றும் தெரிகிறது.

இவர்கள் இம்மாதம் 13-ந் திகதி வரையிலும் கல்முனையில் தங்கியிருப்பர். தேசிய அரசாங்கத்தின் பிரதிநிதியாகத் போட்டியிடவுள்ள ஜனாப் மசூர் மௌலானாவை ஆதரித்துநடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பிரதமர் மற்றும் அமைச்சர்கள் பலரும் கலந்துகொள்ளவிருப்பதாகவும் அறியப்படுகிறது.

தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த எந்த எம். பி. க்களும் இவ் இடைத்தேர்தலில் போட்டியிடவிருக்கும் ஈழத் தமிழர் விடுதலை இயக்கச் சார்பில் போட்டியிடும் திரு. எம். மாணிக்கத்தைச் சந்தித்து தேர்தலில் கலந்து கொள்ளாது விலகி நிற்கக் கோரியதில்லையென உடுவில் எம். பி. நமது நிருபரிடம் கூறினர்.

### கும்பாபிஷேகம்

ஊர்காவற்றுறை, செவ்.

நயினாதீவு செம்மணத்தம் புலம் ஸ்ரீ வீரகத்திவிநாயகர் ஆலய ஆவர்த்தனப் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் அடுத்தமாதம் ஐந்தாம் திகதி நடைபெறவிருப்பதாகியுள்ளது.

### கிணற்று நீரில் நஞ்சு கலக்கப்பட்டதாம்

அளவெட்டி, செவ்வாய்

தமது தோட்டத்திலுள்ள கிணற்று நீரில் ஏதோ நச்சுத் திராவகம் கலக்கப்பட்டதாகவும், கிணற்றுக்கு அருகாமையிலிருந்த 150 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் பம்பை யாரோ திருடிச்சென்றுவிட்டதாகவும் புன்னாலைக்கட்டுவன் வாசியான சின்னப்பு நாகலிங்கம் என்பவர் பொலிஸில் புகார்செய்துள்ளார்.

இதுசம்பந்தமாக சுன்னாகம் பொலிஸைச் சேர்ந்த சார்ஜன்ட் திரு. ரி. செல்லையா சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைசெய்தபோது திருடப்பட்டதாகக் கருதப்படும் பம்ப் புகார் செய்தவருடைய வீட்டுப் பக்கத்தில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி கிணற்றில் நச்சுத் திராவகம் கலக்கப்பட்டதாகக் கூறப்பட்ட புகார் சம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. பொலிஸார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

### தேயிலை ஏற்றுமதி

#### இலங்கை-இந்தியப் பேச்சுவார்த்தைகள்

கொழும்பு, செவ்வாய்

இந்திய, இலங்கை உத்தியோகத்தர்கள், இரு நாடுகளிலும் தேயிலை ஏற்றுமதிகள் பற்றித் தமது பேச்சுவார்த்தைகளை இங்கு முடித்துக்கொண்டுள்ளனர்.

தேயிலை ஏற்றுமதிக்கு ஓர் இணைப்புத் திட்டத்தின் அவசியத்தையும், தேயிலைச் சந்தை பற்றிய ஒத்துழைப்பையும் இரு நாட்டு உத்தியோகத்தர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

### மீண்டும் வேலை

கொழும்பு, செவ்.

சதிவழக்கு சம்பந்தமாக கட்டாய ஓய்வில் செல்லும்படி கட்டளையிடப்பட்டிருந்த உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. வி. கே. ஆறுமுகம் விரைவில் மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கிறார்.

இவர்மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் பொதுசேவைக் கமிஷனரால் விலக்கப்பட்டதைத் தொடர்ந்தே இவர் மீண்டும் வேலையிலமர்த்தப்படவிருக்கிறார்.

கட்டாய ஓய்வில் திரு. ஆறுமுகம் சென்றபோது பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

### பண்டசாலையில் திருட்டு

அளவெட்டி, செவ்வாய்

ஏழாலை கிழக்கு ஐக்கிய பண்டசாலை யன்னலை உடைத்து, பண்டசாலைக்குள்ளிருந்த சுமார் 100 ரூபா பெறுமதியான மண்வெட்டிகளும், மற்றும் உபகரணங்களும் களவாடப்பட்டுள்ளதாக மேற்படி சங்கத்தின் மனேஜரான திரு. இராசையா சுனைகம் பொலிஸில் புகார்செய்துள்ளார்.

இதுசம்பந்தமாக எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. பொலிஸார் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

# அண்ணாவை இலங்கைக்கு அழைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

''சென்னையில் நாவலருக்கு சிலை எடுக்க முயற்சி எடுக்கும் அதே வேளையில் ஈழத்திலும், தமிழ் நாட்டிலும் தொண்டுபுரிந்த விபுலானந்த அடிகளுக்கும் சிலை எழுப்ப முதலமைச்சர் அண்ணாதுரையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.''

தமிழ்க்காங்கிரஸ வாலிப முன்னணியினர் சென்னையில் தங்கியிருக்கும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு நேற்று அனுப்பிய கடிதமொன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழகத்தின் முதலமைச்சர் திரு. அண்ணாதுரையை நேரில் காணவும், அவரது சொற்பொழிவுகளைக் கேட்கவும் இலங்கையிலுள்ள தமிழர்கள் ஆவலாக உள்ளனர், முதலமைச்சர் திரு. அண்ணாதுரையை நேரில் சந்தித்து இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

### வைத்திய சங்கம் ஆதரவு

கொழும்பு, செவ்.

இலங்கையில் ஒரே ஒரு பல்கலைக்கழகம் தான் இருக்கவேண்டுமென்றும் கொழும்பிலும் கண்டியிலும் இருக்கும் பல்கலைக்கழக கல்லூரிகளிடம் தத்தமது கல்வி சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்கும் பொறுப்பு இருக்கவேண்டுமெனவும் இருபல்கலைக்கழகங்களை நடத்த அரசாங்கம் விரும்பினால் பெயர் தராதரம் ஆகிய விஷயங்களில் சம அந்தஸ்து இருக்கவேண்டுமெனவும் இலங்கை வைத்திய சங்கம் பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்துக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்குமிடையே இவை சம்பந்தமாக எழுந்துள்ள சர்ச்சை கவலையளிப்பதாக தெரிவித்துள்ளவைத்தியசங்கத்தினர் மாணவரின் கோரிக்கைகள் நியாயமானதாக தென்படுவதாகவே எடுத்துக் கூறியுள்ளனர்.

### சாவகச்சேரி நகரசபை தேர்தல்

சாவகச்சேரி, செவ்.

சாவகச்சேரி நகரசபை தேர்தல் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. சில வட்டாரங்களில் பெண்களும் தேர்தல் பிரசாரத்தில் இறங்கியுள்ளனர்.

இம்மாதம் 21-ம் திகதி நடைபெறவிருக்கும் இத்தேர்தலில் எல்லா அபேட்சகர்களும் சுயேட்சையாகவே பேட்டியிடுகின்றனர்.

5-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட திரு. சிமகாராசா, தான்போட்டியிலிருந்து விலகிக்கொண்டதாக, அறிவித்துள்ளார்.

10 வட்டாரங்களைக் கொண்ட இந்நகரசபை எல்லை நிர்ணய கமிஷன் விசாரணையின்பின் 11 வட்டாரங்களாக அதிகரிக்கப்பட்டபின்பின் தேர்தல் நடைபெறுகிறது.

### கோபாலன் தெரிவு

கொச்சி, ஜன. 9

கேரளாவில் இடதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசியாக திரு. ஏ. கே. கோபாலன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

### சந்திரன்செல்லும் 'சேர்வேயர்-7'

வாஷிங்டன், ஜன. 9

அமெரிக்காவின் விண்வெளிக்கலமான 'சேர்வேயர்-7' இன்றிரவு சந்திரனில் இறங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

சந்திரனை நோக்கி, அது எவ்வித கஷ்டமுமின்றி முன்னேறிச் செல்வதாக விண்வெளி விஞ்ஞானிகள் இங்கு அறிவித்துள்ளனர்.

### மே.வங்காளத்தில் புதிய கட்சி

கல்கத்தா, ஜன. 9

மேற்கு வங்காளத்தில், புதிய அரசியல் கட்சி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

வங்காளத் தேசியக்கட்சி என்ற பெயரைக் கொண்டுள்ள இக்கட்சியின் நோக்கம், சோஷலிஸ ஜனநாயகத்தை நாட்டில் நிறுவுவதேயாகும்.

### சிங்கப்பூரில் தொம்ப்ஸன்பிரபு

சிங்கப்பூர், ஜன. 9

பிரிட்டிஷ் சாம்ராஜ்யக் காரியதரிசி தொம்ப்ஸன் பிரபு சிங்கப்பூர் வந்துள்ளார்.

அவர், சிங்கப்பூர் பிரதமரைச் சந்தித்து, பிரிட்டனுக்கும் சிங்கப்பூருக்குமிடையேயான பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிப் பேசுவார்.

### யாழ். எம்.பி.க்கு மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் 30 பதிவு செய்யப்பட்ட மொத்த வியாபாரிகள் உள்ளனர் இவர்களில்20 வியாபாரிகள் யாழ்ப்பாண நகரில் இருக்கின்றனர். இவர்கள் உணவுப்பொருட்களை விநியோகம் செய்யும் முறை திருப்தியளிக்கவில்லை. லங்கையின் மற்றப் பகுதிகளில் சங்கங்களின் மூலம்தான் உணவுப்பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வப் பகுதிகளிலுள்ள அரசாங்க அதிபர்கள் வியாபாரிகள் சங்கங்களைத்தான் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் மொத்த வியாபாரிகளாக சிபார்சுசெய்துள்ளனர் ஆதலால் எங்கள் சங்கத்தை பதிவு செய்ய முயற்சிக்க வேண்டும்.

வடபகுதி வர்த்தகர் பாவனையாளர் சங்கத்தின் அமைப்புக் கமிட்டி யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு அனுப்பியுள்ள ஒரு மகஜரில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

### ஆயுர்வேத வைத்தியசாலை

கொழும்பு. செவ்.

இந்தவருடத்தில் மேலும் 10 ஆயுர்வேத வைத்தியசாலைகளை அமைக்க கொழும்பு மாநகரசபை தீர்மானித்துள்ளது. இவையும் ஆரம்பிக்கப்பட்டால் கொழும்பு நகரப் பகுதியில் 31 ஆயுள்வேத வைத்தியசாலைகள் இயங்கும்.

லக்னோ, ஜன. 9

மத்தியப் பிரதேச முதல் மந்திரி திரு. கோவிந்த் நாராயண் சிங், நாட்டின் ஒற்றுமையை மனதிற்கொண்டு பொறுமையுடனும், பெருந்தன்மையுடனும நடந்து கொள்ளுமாறு இந்தி பேசும் மக்களிடம் கோரியுள்ளார

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழில் பெயர்த்தல் வேண்டும். — பாரதியார்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்கஞு மார்கழி மீ 26உ (10-1-68)


## சில நல்ல பயன்

இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு இன்றுடன் இனிது நிறைவெய்துகிறது. மகாநாட்டின் பெறுபேறுகளென்ன என்பது பற்றி இப்பொழுதே திட்டவட்டமாக, விபரமாக எதுவும் கூறிவிடமுடியாது ஆயினும் தமிழ் மொழியின் சிறப்பையும் பெருமையையும், அருமையையும் தமிழ்ப்பண்பாடு, தமிழர் நாகரிகம், தமிழரின் கலைச்செல்வம் ஆகியவை பற்றி, மறந்துவிட்ட தமிழ் இனத்துக்கு, அவை பற்றி நினைவூட்டி தமிழரை மீண்டும் 'நீங்கள் தமிழர்தான்' என்ற விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் தமிழ் தெரியாதாரும்; தமிழர் என்றால் ஏதோ விரும்பத்தகாதவர் என்ற மனப்பான்மையுடைய பிறருக்கு தமிழ் மொழியினதும் தமிழரினதும் சிறப்பையும் பெருமையையும் எடுத்துக்காட்டவும் தமிழ்மீது அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தவும் இந்தமகாநாடு உதவியிருக்கிறது என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

உலகில் பரந்து வாழும் தமிழர்கள் தமிழ்நாட்டின் தலைநகரில் கூடி தமிழுக்கு விழா எடுத்து மகிழ்ந்திருப்பதுடன் பிறநாட்டுத் தமிழ் அறிஞர்களை - தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத - அறிஞர்களுடன் கலந்துரையாடி, பண்டைத் தமிழரின் நிலையையும் இன்றைய நிலையையும் உலகம் உணரவும், தமிழிலுள்ள கருத்துச் செல்வங்கள், கலைச்செல்வங்களை எட்டுத்திக்கும் சென்று பரப்பவும் இந்த மகாநாடு உதவியிருக்கிறது என்று கூறலாம்.

தமிழக பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. கருணாநிதி குறிப்பிட்டது போல தமிழ் இனத்தில் தோன்றியுள்ள இந்த எழுச்சி வெறும் காட்சியாக மாறிவிடாமல் நிரந்தரமான, நிலையான, ஆக்கரீதியில் தமிழுக்கும், தமிழ் இனத்துக்கும் புத்துணர்ச்சியும் புதுவாழ்வும் பெறக்கூடியதாக இந்தமகாநாடுவழிகாட்டவேண்டும்.

ஆங்கிலம் மற்றும் பிறமொழிகளிலுள்ள விஞ்ஞான தொழில் நுட்ப சொற்களை மொழிபெயர்க்கவும் புதிய புதிய சொற்களை ஆக்கவும் உலகில் பரந்துவாழும் தமிழ் மக்கள் அனைவரும் ஒரேமாதிரியான சொற்களை உபயோகிக்கவும் பொதுக் கலைச்சொல் அகராதி தயாரிப்பதற்கென கூட்டுக் குழுவொன்றை அமைப்பதற்கு தமிழக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் இது சம்பந்தமாக இலங்கை, மலேசிய அரசாங்கங்களுடன் கடிதத் தொடர்பு கொண்டிருப்பதாகவும் தமிழக கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் மகாநாட்டில் அறிவித்திருப்பது, மகாநாடு ஈட்டியுள்ள பெறுபேறுகளில் குறிப்பிடத்தக்கது.

பொதுக்கலைச் சொல் அகராதி ஆக்கப்படவேண்டுமென்று நாம் இதே பத்தியில் பல தடவைகளிலும் எடுத்துக் கூறி வந்திருக்கிறோம். தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொண்ட நமது உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வமும் பொதுக்கலைச் சொல்லாக்கத்தின் அவசியம் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். மகாநாட்டுக் கருத்தரங்கில் மொழிபெயர்ப்புக்களை பற்றி கட்டுரை சமர்ப்பித்துப் பேசிய இலங்கையைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன் பொதுக்கலைச்சொல்லாக்கவேண்டிய அவசியத்தை மிகத்திறமையாக எடுத்துக்காட்டியதற்காக அவரைப்பாராட்டவேண்டும்.

பொதுக்கலைச்சொல்லாக்கத்துக்காக கூட்டுக் குழுவொன்றை தமிழக அரசாங்கம் அமைக்குமென்று எதிர்பார்க்கலாம். தமிழ்நாட்டு அரசாங்கம்தான் இந்தப் பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்ற முடியும். தமிழ்மொழி உலகப் பொதுமொழிகளில் ஒன்றாக இருப்பினும் செயல்முறையில், காரியாம்சத்தில் உலகில்லாவிட்டாலும் தென்கிழக்காசியாவிலாவது பொதுமொழியாகவும் இணைப்பு மொழியாகவும் விளங்கவேண்டுமானால் விஞ்ஞான, தொழில் நுட்ப நூல்கள், கவியோகி கூறியதுபோல ஏராளமாக வெளிவரவேண்டும். இதற்குப் பிறமொழிச் சொற்களை தமிழில் ஆக்குவதிலும் புதிய புதிய சொற்களை ஆக்குவதிலும் பொதுவான, ஒரேவிதமான முறைகையாளப்படவேண்டும். மிகவிரைவாக புதிய புதிய சொற்களை ஆக்கவேண்டியதும் அவசியம்.

பொதுக் கலைச்சொல்லாக்கத்துக்கான கூட்டுக் குழுவொன்றை தமிழக அரசு அமைக்கமுன்வந்தாலும் இந்தப்பணிக்கென ஒரு தலைமை நிலையம் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் மலேசியாவிலும் கிளை நிலையங்களையும் அமைத்துச் செயலாற்ற தமிழாராய்ச்சிக் கழகம் முயற்சிசெய்வது நல்லது.

## தையல் பயிற்சி

யாழ்ப்பாணம், புதன் கொக்குவில் அரசினர் தையல் நிலையத்தில், புதிதாக நியமிக்கப்பட்ட தையல் ஆசிரியர்களுக்கு, தையல் மேற்பார்வையாளர் திருமதி ஜி. ஜி. ஜெயவீரசிங்கத்தால் 5 நாட்கள் பயிற்சியளிக்கப்பட்டது.

இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டையொட்டி நடத்திய பூம்புகாரில் ஒருநாள்' கவிதைப் போட்டியில் சான்றிதழ்பெறும் ஈழத்துக் கவிஞர் இ. நாகராஜனின் கவிதையின் முற்பகுதி நேற்று இங்கு வெளியிடப்பட்டது அடுத்த பகுதி இது:-

# பூம்புகார் கண்டேன்

- இ. நாகராஜன் -

கங்குற் கனகன் கருங்கல்லாய்க் கனத்துக் கறுத்துக் காசினியில்
எங்கும் மறைக்கத் தேய்ந்துள்ள இந்துப் பிறையும்
வானகத்தே தொங்கும் மீனும் துலங்காது தோல்வி காணச், செங்கதிரோன்
சிங்கக் குருளை எனச் சிலிர்த்தான் திசைகள் யாவும் தெளிந்தனவே.

அத்தன் புகழை அலைபாட அமைப்பார் வெண்மைச் சங்கினங்கள்
முத்தம் சிந்தி முறுவலிக்க முருகார் வங்கம் பல கடலில்
தத்தித் தவழ்ந்து தமிழ்நாட்டின் தகைமை காணும் காதலினால்
பித்துப் பிடித்து வரும் பெற்றி பிறங்கும் பெருமை நிலைகண்டேன்.

சீனப் பட்டும் சாவகத்தின் சீரும் ஈழநாட்டினிலே
ஆன உணவுத் தானியங்கள் அரபி வாசி யுடன் கரையில்
ஊனம் இல்லா உரோமுடன்சீர் உயர்ந்த கிரேக்க கடாரத்தார்
ஞானம் பயில நம்மவர்க்கு நயந்தீ பண்டம் குவிந்திருக்கும்.

பூவார் காவில் புள்ளினங்கள் புளகம்கொண்டே பொலிதமிழில்
பாவைப் பாடிப் பறக்கவுயர் பரமன் தாளைப் பணிபவரின்
தேவா ரத்தின் தெளிவொலியும் சீலத்தெய்வ நெறிகாட்டும்
கோவில் மணியும் கூடியருள்கொள்ளும் குரலாய் நிதமொலிக்கும்.

ஏரால் நிலத்தை உழுதுவிதை எங்கும் தூவக் காவேரி
நீரைக் கொடுத்து நிதம்பேண நெல்லுமணிகள் நிறைவுற்றுப்
பாரின் பசியைப் போக்கிடவே பாங்கார் இன்பம் பரிமளித்துச்
சீரும் தெளிவும் சிறக்கவைக்கும் திறனார் தமிழர் நிலைகண்டேன்.

விரிந்த பண்பு மனத்தாலே வேடன் புறுவிற் காயுடலை
அரிந்து கொடுத்த அருட்சிபியும் ஆன்றோர் அறத்துக் கமைந்துகன்றைப்
பிரிந்த ஆவின் துயர்கண்டு பிள்ளை மார்பில் தேரூர்ந்து
திரியாச் செங்கோல் நெறிமனுவும் சிறந்து வாழ்ந்த திருநகரம்.

முன்னோர் மரபின் முருகமைய முறைமை பேணும் மன்னவனின்
வன்ன மாடி மதிலகழி மறையோர் மனைகள் வணிகர்களின்
பொன்னார் கூடம் பூவதனைப் புரக்கும் ஏரார் காராளர்
துன்னி வதியும் இருக்கைகளும் துலங்கும் தூய நகர்கண்டன்

புத்தம் சமணம் சைவமுடன் புண்ய தெய்வ நெறியதனை
நித்தம் காக்கும் விகாரைகளும் நேரார் சமணப் பள்ளிகளும்
அந்தன் கோயில் உடனமைந்தே ஆன்ம உயர்வில் சிறந்த மக்கள்
சித்தம் போல நிறைவுற்று சீராய் இலங்கும் அவ்வூரில்.

பொய்யர் இல்லைப் புனைசுருட்டுப் புகலும் புல்லர் இல்லையெங்கும்
செய்ய சீலம் பேணுமருட் செல்வர் சிறந்த சீராளர்
பொய்யா மொழியால் வள்ளுவனார் பூவிற் கீந்த திருக்குறளின்
மெய்யின் வழியே மேவிநிற்போர் விளங்கும் மேன்மை கொள்நகரம்.

நெய்தல் மருதம் முருகுமுல்லை நிமிர்ந்த குறிஞ்சி நிலத்தோர்கள்
செய்ய மரபின் சீர்மையினைத் தினமும் பேணி ஓம்புவதால்
பொய்தீர் வாழ்வு பொலிவுற்றுப் பூரிப்புடனே பலவழியில்
உய்தார் அந்த ஊரிலுள்ள உண்மைத் தமிழர் எனவுணர்ந்தேன்.

கற்புச் செல்வி கண்ணகியைக் கலையார் செல்வி மாதவியை
பொற்புப் பொருள்சொல் புலவோரைப் பொன்ற நீதி புகல்வோரைச்
சிற்பத் திறனை செய்வினையின் சீரை வேற்று நாட்டினைச்சேர்
[illegible] மிளிர்புவனை மேவிப் பொலியும் அந்நகரம்.

(நாளை முடியும்)

# பாராட்டுப் பெற்ற...
# பூம்புகாரில் ...
# 1200 கவி...
# போட்டி...

உலகத் தமிழ் மகாநாட்டினையொட்டி 'பூம்புகாரில் ஒரு நாள்' என்ற தலைப்பில் இளங்கவிஞர்களுக்கான கவிதைப் போட்டி நடத்த வேண்டுமென்று முதலமைச்சர் அண்ணாதுரை விரும்பியதற்கேற்ப நடந்த போட்டிக்கு சுமார் ஆயிரத்து இரு நூறு கவிதைகள் வந்தன.

பேரரசிரியர் மா. கி. தசரதன் தலைமையில் பல புலவர்கள் அவற்றை ஆராய்ந்து 10 கவிஞர்களின் படைப்புகளை பரிசுக்குமட்டும் உரியனவாகத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். இவர்களில் இலங்கையைச் சேர்ந்த கவிஞர் இ. நாகராஜன், கவிஞர் இ. அம்பிகைபாகன் [அம்பி] ஆகிய இருவரின் கவிதைகளும் பாராட்டுக்குரியவைகளாக இடம்பெற்றுள்ளன.

முதல் பரிசு ஏ. சண்முகம், பட்டுக்கோட்டை, 2-ம் பரிசு கோ. திருஞானசம்பந்தம், வ. சோ. ஆண்கள் உயர் நிலைப் பள்ளி, திருவாரூர். 3-ம்பரிசு ந. சந்தானம் கும்பகோணம்.

பாராட்டுப் பெறும் கவிஞர்கள்:- இரா. முத்துலிங்கம் பி. டி. மாணவர். சைதை சக்கரைப்புலவர், ஈரோடு. க. நெடுஞ்செழியன், மாநிலக்கல்லூரி. இ. அம்பிகைபாகன், இலங்கை ஆர். கே. நாராயணசுவாமி நாகப்பட்டினம், இ. நாகராஜன் யாழ்ப்பாணம், சி.

'பூம்புகாரில் ஒரு...
வதற்குத் தேர்ந்...
ஞர் இருவர்: தி...
ஆகியோரே இருவ...
பாகன் இன்று ம...
விழாவில்

வேங்கடசுவாமி, தமிழாசி... யர், அவிநாசி.

முதல் மூன்று கவிஞ... ளும் தங்கப்பதக்கம் பெ... வர். மற்றைய ஏழு பேரு... பாராட்டுப் பெறுகின்றன...

பரிசளிப்பு விழா இன்... 10-ந் திகதி மாலை திவுத்தி... வில் அமைந்துள்ள பூம்பு... ரில் நடைபெறுகிறது. ந... கரும் சட்டசபை உறுப்... னருமான திரு. எம். ... ராமச்சந்திரன் பரிசுக... வழங்குவார். இவ்விழாவி... பொதுப்பணித்துறை அ... ச்சர் திரு. மு. கருணாநி... யின் முன்னுரையுடன் கூடி... 'புகாரில் ஒரு நாள்' கவி... தொகுதி நூல் வெளியி... படும். தமிழ்மாநாட்டு அ... ப்புச் செயலாளர் மு. ர... பெருமாள்முதலியார் பரி... கவிதை விளக்கம் செய்வா...

### உலகத் தமிழாராய்ச்சி

# சிறுபான்மை...
# மொழிப் பிர...
## வேல்ஸ் நாட்டு அறிஞர்...

சென்னை, ஜன. 9

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி சென்னை பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெறும் கருத்தரங்கில் நேற்று முன்தினம் பிற்பகல் மொழியியல், சரித்திரம், சமூக இயல், கலை, புதைபொருள் ஆராய்ச்சி, விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய 5 பகுதிக் கூட்டங்கள் நடைபெற்றதுடன் தமிழில் ஆய்வுக் கட்டுரைகளும் வாசிக்கப்பட்டன.

பிற்பகலில் அமைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. சிறுபான்மையினரின் மொழிப் போராட்டம் என்பது பற்றி வேல்ஸ் நாட்டின் அனுபவ அடிப்படையில் டாக்டர் ஸி. எச். தாமஸ் ஒரு கட்டுரை வாசித்தார். பல நூற்றாண்டுகளாக ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின் காரணமாகவும், வேல்ஸ் மொழிக்குச் சமஅந்தஸ்து வழங்கப்படாமையாலும், வேல்ஸ் மொழிப் பேச்சாளர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டதைக் கட்டுரையாளர் எடுத்துரைத்தார். அக்கட்டுரை பற்றி அடுத்துக் கருத்துத் தெரிவித்த பேச்சாளர்கள் வேல்ஸ் நாட்டின் அனுபவம் இந்தியாவில் உள்ள எல்லா மொழிப் பிரிவுகளுக்கும் படிப்பினையாயிருப்பதாகக் குறிப்பிட்டனர். வேல்ஸ்ஸில் பேச்சுமொழிக்கும், எழுத்து மொழிக்கும் இடையேயுள்ள வித்தி... சத்தை டாக்டர் தாம... எடுத்துக் கூறியதை... தொடர்ந்து தமிழில் சீரா... பேச்சு மொழி இருக்கிற... என்ற சர்ச்சை எ... தது. தமிழில் சீரா... பேச்சு மொழியமை... இருப்பதாகக் கூறமுடி... விடினும் அதற்கான அ... குறிகள் தென்படுவத... மதுரையைச் சேர்ந்த எ... சண்முகம், லெனின்கி... டைச் சேர்ந்த ஸ்ரீருடி... எடின்பரோவைச் சேர்... டாக்டர் ஆஷர் ஆகிய... கள் ஒப்புக்கொண்டன... இப்போது சமூகப்ப... கல் வரும் கதாபாத்தி... கள் பேசும் வசனம் கா... இன்று பேச்சுமொழிய... நடமாடுகிறது என்று அ... கள் குறிப்பிட்டனர். ட... டர் கமில்ஸ்வெலபில், ட... டர் ஜே. ஆர். மார், பே... சிரியர் வி. ஐ. சுப்பிரம... யம் ஆகியவர்களும் இ... சர்ச்சையில் பங்கெடுத்... கொண்டனர்.

### கலை, புதைபொருள் ஆய்வரங்கு

கலை, புதைபொரு... ஆராய்ச்சிப் பிரிவின்... நடைபெற்ற விவாதம்... கரமாயிருந்தது. சென்... புதைபொருள் ஆராய்... இலாகாவிலிருந்து ஓ... பெற்றுள்ள ரசாயன... ணர் டாக்டர் எஸ்... சிவம், 'புதை பொ... ஆராய்ச்சிக்கு ரசாயன... திரத்தைப் பயன்படு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ற ஈழத்துக் கவிஞர் இன்று நேரில் சான்றிதழ் பெறுவார்

## ...விஞர் கலந்து கொண்ட ...யில் 'அம்பி'க்கும் பரிசு

...ஒரு நாள்' கவிதைப் போட்டியில் சான்றிதழ் பெறு ...ர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஏழு கவிஞர்களில் ஈழத்துக் கவி ... திரு. இ. நாகராஜன், திரு. இ. அம்பிகைபாகன் இருவருமாகும். இவர்களில் ஒருவரான திரு. அம்பிகை ...று மாலை பூம்புகார் நகரில் நடைபெறும் பரிசளிப்பு ...வில் சான்றிதழை நேரில் பெற்றுக்கொள்வார்.

...மிழாசிரி
...கவிஞர்க
...பெறு
...பேரும்
...ன்றனர்.
இன்று
...வுத்திட
பூம்புகா
...து. நடி
உறுப்பி
...எம். ஜி
...சுகளை
...விழாவில்
...ற அமை
...ருணாநிதி
...ன் கூடிய
கவிதை
...ளியிடப
...டு அமை
மு. ரா.
...ர் பரிசுக்
...செய்வார்

### விடுதலை வீரர்கள்

'தமிழக விடுதலை வீரர்கள்' என்ற தலைப்பில் பூம்புகார் நகரில் கவியரங்கு ஒன்று நடைபெற்றது. பல கவிஞர்கள் பங்குகொண்டு கவிதை பாடினார்கள். கவியரங்கிற்கு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி தலைமைவகித்தார். எல்லோரையும் அவர் கவிதை வாயிலாகவே வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சியில் பங்குகொள்ளும் ஒவ்வொரு புலவரையும் அவர் கவிதை மூலமாகவே அறிமுகம் செய்தார்.

தேசபக்த திலகங்களான கட்டபொம்மன், மருதிருவர் வ. உ. சி, உ. வே. சுவாமிநாதஐயர் ஆகிய அறுவரை பற்றியும் புலவர்கள் திருச்சிற்றம்பலக்கவிராயர், திரு. சிதம்பர ரகுநாதன், திரு. நடராஜன், கு. மா. பாலசுப்பிரமணியம் திருமதி சௌந்தரம் கைலாசம், திரு. நா. பாண்டுரங்கன், திரு. எஸ். டி. சுந்தரம் ஆகியோர் கவிதை பாடினர்.

### அண்ணா

இதன் பின் 'அண்ணா' என்ற தலைப்பில் அவர் ஒரு சிறந்த பேச்சாளர், முதல்வர், நடிகர், அன்னை, தத்துவமேதை, தலைவர், எழுத்தாளர், தாய் மொழிக் காவலர் என்ற எட்டுக்கோணங்களிலிருந்து முறையே பொன்னிவளவன், அப்துல் ரஹ்மான், முத்துலிங்கம், வேழவேந்தன், தமிழ்பித்தன், கருணானந்தம், கொத்தமங்கம் சுப்பு, முடியரசன் ஆகியோர் கவிதை பாடினார்கள்.

### சுவீடிஷ் மொழியில் திருக்குறள்

இந்நிகழ்ச்சியின்போது சுவிட்ஸர்லாந்தைச் சேர்ந்தவரும் தமிழகத்தில் வாழ்ந்துவருபவருமான திரு. இங்குவேகிரிகல் என்ற வெள்ளைக்காரர் தனது தாய்மொழியான சுவீடிஷ் மொழியில் திருக்குறளை மொழிபெயர்த்திருப்பதாகவும் இன்னும் சில நாளில் அச்சில் ஏற இருக்கிறதென்றும் தெரிவித்து அவரது மொழிபெயர்ப்புப் பிரதியொன்றை கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியனிடம் அளித்தார். திரு. நெடுஞ்செழியன் நன்றி கூறினார்.

### ரஷ்யக்குழு தலைவர் பெருமிதம்

தமிழாராய்ச்சி மாநாட்டில் தாங்கள் கலந்துகொண்டது ரஷ்யாவில் திராவிட இயல் ஆய்வையும் போதனையையும் அபிவிருத்திசெய்ய பெரிதும் உதவுமென்று மகாநாட்டில் கலந்துகொண்ட ரஷ்ய குழுத் தலைவர் டாக்டர் செலிஷேவ் தெரிவித்தார்.

ரஷ்யாவில் இப்போது இந்தி, உருது, வங்காளி, தமிழ் ஆகிய நான்கு இந்திய மொழிகள் பிரபலமாக உள்ளன. மாஸ்கோ அரசாங்க பல்கலைக்கழகம், லெனின்கிரேட் அரசாங்க பல்கலைக்கழகம், மாஸ்கோ அரசாங்க சர்வதேச உறவு பயிற்சிக் கழகம் ஆகிய மூன்றிலும் தமிழ் போதிக்கப்படுகிறது.

# புலவருக்கு ஆபத்து!

'நான் புலவனாகலாம் என்று ஆசை இருக்கிறது. ஆனால் இதுவரை அது பூர்த்தியாகவில்லை' என்று அறிஞர் அண்ணா உலகத் தமிழ் மகாநாட்டில் கூறினார்.

புலவனாயிருப்பதில் உள்ள படு துன்பங்களை அண்ணா அறிவாராயின் அப்படிக்கூறியிருக்கமாட்டார்.

எந்நேரமும் கற்பனாலோகத்தில் சஞ்சரிப்பவனாகிய புலவன் உலக நடமாட்டங்களில் கவனம் செலுத்தமாட்டான். இல்லற வாழ்க்கையிலும் அக்கறை கொள்ளமாட்டான். உலகாதய வாழ்வில் அவன் புலன் செலுத்தமாட்டான்,

இதனால் வரும் இடர் அநேகம்.

உமர் கய்யாம் என்ற பிரபல பாரசீகப்புலவன் பிறந்தநாட்டில் இப்பொழுது ஒரு நவீன உமர் உதயமாகியிருக்கிறார். இப்புலவசிரோமணி தமது மனைவியுடன் பேசும்போது கவிதையில் தான் பேசுவாராம்,

அந்த மாதுசிரோமணிக்கு இந்த கவிதா சம்பாஷணை பிடிக்கவில்லை. 'உள்வீட்டில் சண்டைகள் நடக்கும் போதும் அவர் கவிதையில் தான் பாடுகிறார். என் வாழ்க்கை படுநரகமாய் போய்விட்டது. அல்லும் பகலும் வீட்டுக்குள்ளிருந்து கவிதை புனைவதுதான் அவருடைய வேலை', என்று அவள் வழக்குப் போட்டிருக்கிறாள்,

நீதியாளர்கள் அவனைக் கூப்பிட்டு விசாரித்தபோது 'என் கவிதைத் திறனைக் கண்டுதான் அவள் என்னைக் காதலித்து மணந்துகொண்டாள். இன்று என் கவிக் கரும்பு அவளுக்கு வேம்பாகிவிட்டது' என்று பிரலாபித்தனும்.

காதல் கூடும் நேரத்தில் அவன் 'மாசறு பொன்னே, வலம்புரி முத்தே! காசறு விரையே! கரும்பே, தேனே! மலையிடைப் பிறவா மணியே என்கோ! அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ! யாழிடைப் பிறவா இசையே என்கோ! தாழிருங் கூந்தலையால் நின்னை' என்று கோவலன் கண்ணகியைப் பார்த்துக் கூறியதுபோல் காதற்கவிதை பாடியிருப்பான். அல்லது 'அடிசிற்கினியாளே அன்புடையாளே!,' என்று வள்ளுவர் வாசுகியைப் பார்த்துப்பாடியதுபோல் பாட்டிசைத்திருப்பான்.

வீட்டில் பிணக்கு ஏற்பட்டபோது எவ்வாறு கவி அம்பு விட்டிருப்பான் என்றும் கற்பனைசெய்யத்தோன்றுகிறது. 'எட்டேகால் லட்சணமே, எமனேறும்பரியே, மட்டில் பெரியம்மை வாகனமே!' என்று எருமையே, கழுதையே என்று சொல்லாமற் சொல்லியிருப்பானோ, யார் கண்டது?

ஃ ஃ ஃ

# நாட்டிலும் நகரிலும்

— 'வழிப்போக்கன்' —

இவ்வுலகத்தில் வாழும் நாட்களுக்குள் ஏதாவது ஒரு துறையில் ஒருபுதிய சாதனையை நிலைநாட்டவேண்டுமென்று நினைப்பது 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற குறளைக் கடைப்பிடிக்கும் மனிதன் ஒவ்வொருவனுக்கும் சகஜமாக தோன்றும் நினைவு.

சிலர் மிகவும் அபூர்வமான துறையில் தமது சாதனையைச் செய்துகாட்ட முயலுவார்கள். உதாரணமாக, பாருங்கள்.

ரொடேசியாவிலுள்ள ஜோன் வெயிஸ்மன் என்பவர் கமார் நூறு கொடிய விஷப் பாம்புகள் குடியிருக்கும் ஒரு புதரில் மூன்று நாட்கள் இரவுபகலாக தமும் குடியிருக்கத் தீர்மானித்து அப்படியே செய்து வருகிறார். நாகபாம்பு, புடையன் விரியன், மலைப்பாம்பு என்று உலகிலுள்ள சகல விதமான விஷப் பாம்புகளோடும் அவர் சீவியப் நடாத்துகிறார். இரவு நேரத்தில் தானும் அவருக்கு சற்று சிரமமாயிருக்கிறது. ஏனென்றால் பாம்புகள் அவருடைய உடல் சூட்டைத் தேடிவந்து அவரோடு ஒட்டிக்கொண்டு சுருண்டு படுத்து விடுகின்றன. 'இம்' என்றால் போதும். நான்கு விஷப் பற்கள் அவரைப் பதம் பார்த்துவிடும்.

பாவம் வெயிஸ்மனுக்கு இரவு முழுவதும் அரைத் தூக்கம்தானும்.

## இன்றைய பலன்

[10-1-68]

புதன்கிழமை

மார்கழி மீ 26 வ. நட்சத்திரம்- பரணி மாலை 5-05 மேல் கார்த்திகை.

திதி-தசமி பகல் 3-26 மேல் ஏகாதசி.

சுப நேரம் -5-02-6-32

ராகுகாலம்-12-32-2-02

மேஷம்: முகமன் கூறுவோர்கண்டு மோதனத்தில் மூழ்கிவிடு.

ரிஷபம்: மனைவாழ்வில் மலர்ச்சி, மனதில் ஆனந்தம்.

மிதுனம்: தூக்கம் கெடும், துன்பம் அணைக்கும்

கடகம்: விளைபொருள் விருத்தி, விருந்துமுண்டு.

சிம்மம்: மக்கள் வழி மகிழ்ச்சி, மன நிம்மதி.

கன்னி: அலுவலகத்தில் தொல்லை, ஆத்திரம் வேண்டாம்.

துலாம்: வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம்.

விருச்சிகம்: மௌனமே நன்று, மனச்சாந்தி உண்டு

தனுசு; குருவின் ஆசி, கொள்கைப்பலம்.

மகரம்: இறைவழிநாட்டம், இன்பமும் கிடைக்கும்.

கும்பம்: வருமானம் வளரும், வழியும் பிறக்கும்

மீனம்: குழப்பநிலை, குறைகேட்கநேரிடும்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## ...ச்சி மகாநாடு

# ...மையோர் ...பிரச்னை

## ...ஞர் ஆய்வுரை

...வித்தியா
...ர் தாமஸ்
...யதைத்
...ில் சீரான
...ருக்கிறதா
எழுந்
...சீரான
...ரியமைப்பு
...றமுடியா
...ான அறி
...படுவதாக
...ர்ந்த என்.
...லனின்கிரா
...ஸ்ரீருடின்,
சேர்ந்த
ஆகியவர்
...ாண்டனர்.
...மகப்படங்
...பாத்திரங்
...னம் தான்
...மொழியாக
...ன்று அவர்
...னர், டாக்
...பில், டாக்
...ார், பேரா
...சுப்பிரமணி
...ளும் இந்த
...கெடுத்துக்

...பொருள்

...தபொருள்
...பிரிவின்கீழ்
...வாதம் ருசி
சென்னை
ஆராய்ச்சி
...ஒய்வு
...சாயன நிபு
எஸ் பரம
...பொருள்
...சாயனசாஸ்
...யன்படுத்து

...வது' என்பது பற்றி வாசித்த கட்டுரையில் நவீன கருவிகளைக்கொண்டு எப்படிப் பல புராதன சின்னங்களைக் கண்டுபிடிக்க முடியுமென்று விளக்கினார்.

பாங்காக் (தாய்லந்து) புதைபொருள் ஆராய்ச்சி இலாகா டைரக்டர் பிரின்ஸ் சுபத்திரா தின்குல், 'நாராயணன்' என்ற சிற்பத்தைப் பற்றி வாசித்த கட்டுரையில் தெற்கு தாய்லாந்தில் கண்டெடுக்கப்பட்ட அந்தச் சிற்பத்தின் முகபாவம் மட்டுமே 'தாய்' பாணியில் இருக்கிறதே தவிர, விக்ரக வார்ப்படமும், ஆடையணிகளும் பல்லவ பாணியில் அமைந்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

கம்போடியாவில் உள்ள காரைக்காலம்மையார் சிலைகள் பற்றி திரு. எம். பெனாய்ஸ்ட் ஒரு கட்டுரை வாசித்தார்.

மாமல்லபுரம் கல் ரதங்கள் பற்றி டாக்டர் சார்லஸ் பாப்ரி வாசித்த கட்டுரையில் அந்த ரதங்கள் கி. பி. ஐந்தாவது நூற்றாண்டில் உருவானவை. அவை நாகார்ஜுன கொண்டா சிற்பங்களைப் பின்பற்றி அமைக்கப்பட்டவை என்ற கருத்தை வெளியிட்டார்.

விஞ்ஞான, தொழில்நுட்பப் பிரிவில் நடைபெற்ற விவாதத்திற்கு டாக்டர் லலிதா காமேஸ்வரன் தலைமைவகித்தார். இலங்கை அரசாங்க சுகாதார இலாகாக் காரியதரிசி திரு. சி. பாலசிங்கம் வாசித்த கட்டுரையில் டச்சுக்காரர் காலத்தில் இலங்கையில் தமிழ் அச்சிடுவதில் புள்ளிகளும் மற்றும் நபி அடையாளங்களும் பயன்பட்டதாகக் கூறினார்.

# தமிழுக்கு இன்னும் நெருக்கடி தீரவில்லை

## நாஞ்சில் மனோகரன் கருத்து

சென்னை, ஜன. 8

தமிழுக்கு ஏற்பட்ட நெருக்கடி இன்னும் தீரவில்லை தமிழ் மக்களின் மொழி உணர்ச்சியைக் கண்ட பின்பாவது தமிழுக்குநெருக்கடி ஏற்படுத்துவதை நிறுத்திக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதையும் மீறி எந்த நெருக்கடி வந்தாலும் அதைத் தமிழர்கள் தூள்தூளாக்கமுடியும். தமிழ் சாகாவரம் பெற்றது; என்றும் அழியாதது. சகாவரம் பெற்றது, என்று கூறிவிட்டு, தமிழ்மொழியை அழிக்கவரும் சக்திகளை ஏற்றுக்கொள்ளமுடியாது.

உலகத் தமிழ் மகாநாட்டையொட்டி பூம்புகாரில், இலக்கியத்தில் புரட்சி என்னும் தலைப்பில் நடைபெற்ற சொற்பொழிவு தொடருக்கு நாஞ்சில்மனோகரன் தலைமைவகித்துப் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. மனோகரன் மேலும் கூறியதாவது: மதத்தின் பெயரால் நாடுதுண்டானது போல், மொழியின் பெயரால் துண்டாகிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மத்திய அரசின் கடமை.

ஹிந்தி மொழிக்காரர்கள் உணர்ச்சிவசப்பட்டிருக்கிறார்கள். உணர்ச்சி மட்டும் பயன்தராது. அவர்கள் அறிவாளிகளாக மாற வேண்டும். ஹிந்தியை படிப்பதற்கு அதில் என்ன இருக்கிறது. ஹிந்தியைப் படிக்க வேண்டுமென்று பயமுறுத்துவதால், எந்தப் பயனும் ஏற்படாது. ஆகவே மேலிடத்திலுள்ளவர்கள் திருந்திவிடவேண்டும். அவர்கள் திருந்தும்வரை நாம் பொறுத்திருக்கவேண்டும்.

சொற்பொழிவுத் தொடரை திரு என். வி. நடராசன் ஆரம்பித்துவைத்துப் பேசிய போதுகூறியதாவது:

தமிழை அழிக்கவேண்டும் என்ற முயற்சி நடக்கிறது. அந்த முயற்சியை முறியடிப்பதையே இந்த மாநாட்டின் நோக்கமாகக் கொள்ள வேண்டும். தமிழுக்கு ஆபத்து வரும்பொழுது தமிழர்கள் கட்சி வேறுபாடின்றி ஒன்றுபட்டார்கள் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்

பேராசிரியர் டாக்டர் சுப. மாணிக்கம் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ் என்ற சொல் இப்பொழுது ஒரு மந்திரமாகி விட்டது. இதனால் ஏற்படும் பயன் என்ன என்பதை இனித்தான் அறிந்துகொள்ளமுடியும். உலகத் தமிழ் மாநாட்டையொட்டி சிலைகள் எழுப்பியபோது. தொல்காப்பியருக்கு சிலை எழுப்பாதது பெருங்குறையாகும் அந்தக் குறையை விரைவில் நீக்க வேண்டும்.

திரு மி. ப. சோமசுந்தரம் பேசும்போது. இலக்கிய கார்த்தாக்களும், கவிஞர்களும்தான் நாட்டில் புரட்சியை ஏற்படுத்தவேண்டும் என்பது மக்களின் விருப்

[8-பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவும் உள்ளூர் அறிவும்

**வினாக்கள்**

1. ஐ நா. சாசனம் எப்போது, [எங்கே] கைச்சாத்திடப்பட்டது?
2. முதலாவது சேர் பட்டம் பெற்ற இலங்கையர் யார்?
3. மனித முகமும் சிங்க உடலும்கொண்ட சிற்பத்தின் பெயர் யாது?
4. முதன்முதல் தயாரிக்கப்பட்ட தமிழ்த் திரைப்படம் யாது?
5. உலகில் றப்பர் [Rubber] விளைவிற்கு முதலிடம் பெறும் நாடு யாது?
6. சுவீடன் [Sweden] தேசத்தில் தனது சொந்த ஸ்ருடியோ வைத்து ஓவியக்கலையில் ஈடுபட்டிருக்கும் இலங்கையர் யார்?
7. சர்வதேச அணுசக்தி ஏஜன்சி [Iaea] இன் தலைமைக் காரியாலயம [Hqrs] எங்குள்ளது?
8. ரிருனு [Tirana] எந்நாட்டின் தலைநகரம்?
9. சர்வதேச நீதிமன்றத்தின் [International court of Justice] அரசகருமமொழிகள் யாவை?
10. நோபெல் [Nobel Prize] பரிசு எவ்வாண்டிலிருந்து வழங்கப்பட்டுவருகிறது?
11. ஐ. நா. வியாபாரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் ஆக அமைந்த மகாநாடு [Unctad] எப்போது தாபிக்கப்பட்டது.
12. எதிர்வரும் ஒலிம்பிக் விளையாட்டுகள் [Olympic Games] எந்நாட்டில் நடைபெற இருக்கிறது?
13. இலங்கை எத்தனை பாராளுமன்றத் தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது?
14. எம். சி. சி. [M. C. C.] கெப்டன் யார்?
15. அல்பிரட் ஹிச்ஹொக் [Alfred Hitchock] எத்துறையுடன் ஈடுபாடுகொண்டவர்?

விடைகள் 7-ம் பக்கம்

# வானொலி நிகழ்ச்சிகள்

## புதன் 10-1-68

## இலங்கை

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மாணவர் மன்றம்-வானொலி அக்கா.

இரவு 6-15 பாட்டு—விக்னேஸ்வரி கயிலேஸ்வரன் 6-45 பாவளம், 7-00 கிராம சஞ்சிகை, 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பாட்டு – நாகபூஷனி தணிகாசலம், 10-00 நேயர் விருப்பம்.

## சென்னை-1

காலை 6-00 மங்களஇசை, 6-05 துதிப்பாடல்கள், 6-15 திருப்பாவை — திருப்பள்ளி எழுச்சி 6-30 நிகழ்ச்சிக்குறிப்புகள், 6-35 அருள்வாக்கு, 6-45 இசை அமுதம்,—காரைக்குறிச்சி அருணசலம் இசைத்தட்டு, 7-15 தமிழில்செய்தி, 7-30 பாமாலை — எம். பாலமுரளிகிருஷ்ண, 8-15 நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ்மாநாடுகருத்தரங்கின் தொகுப்புரை, 9-15 வயலின், 9-45 வாத்திய இசை, 10-00 பாட்டு, 10-55 ஆங்கிலத்தில் செய்தி, 11-55 பிராந்தியசெய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 கல்வி ஒலிபரப்பு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்தியக் கோஷ்டி, 1-45 திரைகானம், 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-30 பாடற்பயிற்சி, 5-45 மெல்லிசை.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-30 வாத்திய இசை, 6-45 திரைகானம், 7-15 தமிழில்செய்தி, 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 உணர்வில் ஒருமைப்பாடு பேச்சு—டி. கே. சண்முகம், 8-30 இளைஞர் குரல் 8-45 ரேடியோ செய்திமலர், 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 9-15 சென்னையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ்மகாநாடு கருத்தரங்கின் தொகுப்புரை, 10-30 திரைகானம்.


## திருச்சி-1

காலை 6-30 வந்தேமாதரம் 6-50 பக்திப்பாடல், 6-55 அறவுரை, 7-00 திருப்பாவை திருப்பள்ளி எழுச்சி, 7-15 தமிழில் செய்தி, 8-15 நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ்மகாநாட்டு கருத்தரங்கின் தொகுப்புரை, 11-55 பிராந்தியச்செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 கல்வி ஒலிபரப்பு, 1-00 பெண்ணுலகம், 1-30 ஆங்கிலத்தில் செய்தி, 1-50 இசை மஞ்சரி, 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-30 திரைப்பட இசை.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 திரைப்பட இசை, 6-30 ஊர்ச்சாவடி, 6-35 நாட்டுப்பாடல்கள், 6-45 இசைப்பயிற்சி, 7-00 பொதுமேடை, 7-15 தமிழில் செய்தி, 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 ஸ்ரீ பிரஹதீஸ்வரர் ஆலயம் சித்திரம், 8-30 வீணை, 9-00 செய்தி, 9-15 சென்னையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு கருத்தரங்கின் தொகுப்புரை-[illegible] அஞ்சல், 10-30 ஆங்கிலத்தில் செய்தி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

# குருநகர் கோஷ்டியை மயிலிட்டி தோற்கடித்தது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் யாழ் விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மயிலிட்டி புளுஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற 2-ம் பிரிவுக்கான உதைபந்தாட்ட மோதலில் மயிலிட்டிக் கோஷ்டியினர் 4—0 கோல்களால் குருநகர் பாடும்மீன் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர்.

ஆரம்பத்திலிருந்து முடிவுவரையும் ஆட்டம் சுறுசுறுப்பாகக் காணப்பட்டது. கட்டத்துக்குக் கட்டம் மயிலிட்டி முன்னணி வீரர்களின் மின்னல்வேகப் 'பாசிங்' பந்தாட்டம் அருமையாகஇருந்தது. இதனால் இக் கோஷ்டியினருக்கு பல கோல்கள் போடும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன, இச்சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திய முன்னணி வீரர்கள் அடுத்தடுத்து கோல்களை விளாசிக் கொண்டனர். எனினும் குருநகர் கோஷ்டி விட்டுக் கொடுக்காமல் இயன்றவரை நன்றாக ஆடியதுகுறிப்பிடத்தக்கது.

இப்போட்டியை அடுத்து சென். நிக்கலஸ் கோஷ்டிக்கும் புனிதவளன் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற 1-ம் பிரிவுப் போட்டியில் ஆரம்பத்திலிருந்து இறுதிவரையும் பெரும் பலப்பரீட்சையில் ஈடுபட்ட இரு கோஷ்டியினரும் ஆளுக்கு தலா 1—1 கோல் பெற்று ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்தனர்.

ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் இரு கோஷ்டியினரும் அருமையாக ஆடிய காரணத்தினால் போட்டி உதை பந்தாட்ட ரசிகர்களுக்கு நல்ல விருந்து அளித்துக் கொண்டிருந்தது.

## வதிரி வென்றது

ஜொலிஸ்டார் விளையாட்டுக்கழகத்துக்கும் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற 2-ம் பிரிவுப்போட்டியில் வதிரி டைமன்ஸ் கோஷ்டியினர் 4-2 கோல்களால் ஜொலிஸ்டார் விளையாட்டுக் கழகத்தைத்தோற்கடித்தனர்.

இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் இரு கோஷ்டியினரும் நன்றாக ஆடிய காரணத்தினால் இரு கோஷ்டியினருக்கும் கோல்கள் போடும் சந்தர்ப்பங்கள் தாராளமாகக் கிடைத்தன. இருசாராரும் அதிர் அடிகளுடன் கூடிய அபாரமான கோல்கள் போட்டமையால்போட்டியின் தரம் உயர்வாகக் காணப்பட்டது. இடைவேளையின் போது ஜொலிஸ்டார் விளையாட்டுக்கழகம் 2 கோல்களும் வதிரிடைமன்ஸ் கோஷ்டியினர் 3 கோல்களும் பெற்றிருந்தனர்.

இடைவேளையின் பின்னர் நடந்த போட்டி உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. கட்டத்துக்குக் கட்டம் அருமையான ஆட்டங்கள் ரசிகர்களை உணர்ச்சிவசப்படுத்திக்கொண்டிருந்தது. இடைவேளைக்குப் பின்னர் நடைபெற்ற போட்டியில் ஜொலிஸ்டார் கோஷ்டியினர் ஒரு கோலும் போடாதவகையில் வதிரி டைமன்ஸ் கோஷ்டியினர் மேலும்ஒரு கோலை விளாசித் தள்ளினர். இக்கட்டங்களில் வதிரி டைமன்ஸ்கோஷ்டியினர்பலகோலடிருக்கும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டது குறிப்பிடத்தக்கது.

## குருநகர் வெற்றி

இப்போட்டியை அடுத்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 'ஏ' பிரிவுக்கும் இடையே நடைபெற்ற 1ம் பிரிவுக்கான உதைபந்தாட்ட மோதலில் குருநகர் ஐக்கிய விளையாட்டுக்கழகம் 3—1 கோல்களால் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்தது.

இப்போட்டியும்ஆரம்பத்திலிருந்து முடிவுவரையும் பெரும் மோதலாக வ காணப்பட்டது. சென் மேரிஸ் கோஷ்டியினரின் அருமையான 'பசிங்' ஆட்டமும் குருநகர் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் பின்னணி வீரர்களின் அருமையான அதிர் அடிகளும் போட்டிக்கு மென்மேலும் விறுவிறுப்பையும் அதனால் ரசிகர்களுக்கிடையே ஒரு பரபரப்பையும் ஏற்படுத்திக்கொண்டிருந்தன. குருநகர் கோஷ்டியினரின் அதிரடியுடன் கூடிய கோல்கள் மிகவும் ரசிப்பாகக் காணப்பட்டது

[வி.நி.]

## விளையாட்டுக்கழகம்

முல்லைத்தீவு, செவ்.

முல்லைத்தீவு முதலாம்வட்டார வளர்பிறை விளையாட்டுக்கழகத்தின் பொதுக்கூட்டம் தலைவர் திரு. ப. வே. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது, புதுவருட உத்தியோகத்தர்களாகக் கீழ்க்காணப்படுவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. ப. வே. செல்லத்துரை, உபதலைவர்: திரு. ச. உமாமகேஸ்வரன், செயலாளர்: திரு. சு. பொன்னுச்சாமி, உபசெயலாளர்: திரு. கா. திருநாவுக்கரசு, தனாதிகாரி: திரு. இ. மரியநாயகம்.

## அராலி வென்றது

அராலி, செவ்வாய்

மாதகல் ஐக்கியவிளையாட்டுக்கழக உதைபந்தாட்ட வீரர்கள், அராலி தெற்கு சனசமூக நிலைய உதைபந்தாட்டவீரர்களோடு நேற்று மாலை அராலி விளையாட்டு மைதானத்தில் ஆடிய விளையாட்டில் அராலி கோஷ்டியினர்மாதகல்கோஷ்டியினரை ஒரு கோலால் தோற்கடித்தனர்.

இரு கோஷ்டியினரும் சமபலத்தோடு விறுவிறுப்பாக ஆடி ரசிகர்களின் பாராட்டுகளைப்பெற்றனர். ஆட்டத்துக்கு திரு. [illegible] மத்தியஸ்தம் வகித்தார்.

## திருவெம்பாவை

அளவெட்டி, செவ்.

அளவெட்டி, கீரிமலை, மாவிட்டபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள பல கோவில்களில் திருவெம்பாவை பூசை விழா நடைபெற்றுவருகின்றது.

## சிரமதானம்

சுழிபுரம், புதன்

சித்தங்கேணி இளைஞர்கள் சிரமதானமுறையில் கோவிலுக்கு ஓடுபோட்டனர். சித்தங்கேணி சிதம்பரேஸ்வர ஆலய மண்டபக் கூரை திருத்தம் செய்யப்பட்டு ஓடு போடப்படாமல் இருந்தது சுமார் இருபது வாலிபர்கள் திரு. எஸ். சண்முகநாதன் தலைமையில் இப்பணியைச் செய்தனர்.

## தமிழ் பிரிவு

அநுராதபுரம், செவ்.

களுத்தாவை சிங்களமகா வித்தியாலயத்தில் தமிழ் மாணவருக்கான பிரிவிற்கு தலைமை ஆசிரியராக திரு. வி. ஆறுமுகம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அநுராதபுர விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத்திலிருந்து மாற்றலாகிச் சென்றுள்ளார்.

## மண்டை ஓடு மர்மம்

காலி, செவ்

உடுகமவில் மண்டை ஓடு ஒன்று கண்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்ற புலன் விசாரணையில் மூன்றுபேர்கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பெண்.

நான்கு வருடங்களாகத் தேடப்பட்டுவந்த ஒருவரின் மண்டை ஓடு இது எனத் தெரியவருகிறது.

## முத்தமிழ் விழா

அராலி, செவ்வாய்

அராலி களவத்துறை சனசமூக நிலையத்தினர் இவ்வாண்டு தமது நிலைய வருடாந்த விழாவை எதிர்வரும் பொங்கல் தினத்தன்று முத்தமிழ் விழாவாக நடாத்த பெரிய ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். விழாவில் இயல், இசை, நாடகங்கள் இடம்பெறவிருக்கின்றன.

## ஒலிபரப்பாகும்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன ஊழியர்களினால் நீர்வேலி அரசாங்க பாலர் விடுதியில் சமீபத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டு 8-ம் திகதி மாலை 7 மணியளவில் ஒலிபரப்பப்பட்ட கதம்ப நிகழ்ச்சிகளை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம் மீண்டும் இம்மாதம் 12-ந் திகதி மாலை 7 மணியளவில் ஒலிபரப்பப்படுமென அறிவித்துள்ளது.

புத்தூர் அரசாங்க 'வின்சன்' குழந்தைகள் பராபரிப்பு நிலையத்தில் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன ஊழியர்களால் ஒலிப்பதிவுசெய்யப்பட்டகதம்ப நிகழ்ச்சி மார்ச் 11-ம் திகதி ஒலிபரப்பப்படுமென்றும்அறிவிக்கப்பட்டுள்ளது. [வி, நி]

## அரவம்தீண்டி மரணம்

யாழ்ப்பாணம், புதன்

பலாலி ராணுவ முகாமைச் சேர்ந்த சார்ஜண்ட் ஐ டி. பி. ஆரியபால என்னும் ராணுவ அதிகாரி நாகம் தீண்டியதாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

உடுகம்பொல என்னுமிடத்தைச் சேர்ந்த ஆரியபாலாவின் மரணவிசாரணையை மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் நடத்தினார். [வி.நி]

# பொது அறிவும் உள்ளூர் அறிவும்

விடைகள்

1. 1945-ம் ஆண்டு யூன் மாதம் 26-ம் திகதி [26-6-1945], சான்பிரான்சிஸ்கோ [San Francisco] நகரில் கைச்சாத்திடப்பட்டது.
2. கலாயோகி ஆனந்தகுமாரசாமி அவர்கள்.
3. ஸ்பிங்க்ஸ் [Sphynx]
4. காளிதாஸ்.
5. மலாயா [[Malaya]
6. ஒலிவர் வீரசிங்க [Oliver Weerasinghe].
7. வியன்னு [Vienna] நகரில்.
8. அல்பேனியா [Tirana]
9. பிரெஞ்சும் ஆங்கிலமும் [French and English]
10. 1901-ம் ஆண்டிலிருந்து.
11. 1964-ம் ஆண்டு டிசம்பர் 30-ம் நாள் [30-12-1964].
12. மெக்ஸிக்கோ [Mexico]
13. 145.
14. கொலின் கௌடிறி [Colin Cowdrey]
15. படத் தயாரிப்பு.

[அடுத்த மாதிரி வினாவிடைகள் 13-1-68-ல் வெளிவரும்]


## மணிவாசகர் விழா

(பதின்மூன்றுவது)

காரைநகர்

ஈழத்துச் சிதம்பரத்தில் மணிவாசகர் விழா 10-1-68-ந் திகதி தொடக்கம் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு மாலை 6 மணி தொடக்கம் நடைபெறும்: அத்தருணம்

மதுரையாதீன செஞ்சொற் கொண்டல்

தருமை யாதீன வித்துவான்

சோ- சிங்காரவேலன் M. A. Dip Ling அவர்கள்

சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள்.

இவருடன் தொடர்புகொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரியில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

வே செல்வநாயகம், இணைக்காரியதரிசி,

மணிவாசகர் சபை, காரைநகர்

154







Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழகம் திரும்பும் இந்தியர் நிலைமை

## அண்ணாவுடன் இலங்கை அமைச்சர் ஆலோசனை

சென்னை, ஜன. 9
இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு குடிபெயர்ந்து செல்லவிருக்கும் இந்திய வம்சாவழியினரைத் தமிழகத்தில் குடியமர்த்தும் திட்டங்கள் பற்றி தமிழக முதல் மந்திரி திரு. சி. என். அண்ணாதுரையுடன் இலங்கை உள்ளூராட்சித்துறை அமைச்சர் செனட்டர் திருச்செல்வம் ஆலோசனைகள் நடத்தினார்.

தோட்டங்களிலும், விவசாயப் பண்ணைகளிலும், தொழிற்சாலைகளிலும் இந்த மக்களைக் குடியமர்த்துவதற்கான விரிவான திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக தமிழக முதன் மந்திரி இலங்கை மந்திரியிடம் தெரிவித்துள்ளார்.

உலகத் தமிழாராய்ச்சி மகா நாட்டில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கலந்து கொள்ள வந்திருக்கும் செனட்டர் திரு. செல்வம், இவ்வளவு பெரிய அளவில் தமிழ் மகாநாடு நடைபெறுவது தம்மைப் பெரிதும் கவர்ந்து விட்டதாக இலங்கை மந்திரி திரு. அண்ணாதுரையிடம் தெரிவித்துக் கொண்டார்.

4-வது உலக தமிழாராய்ச்சி மகாநாடு இலங்கையில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### பிஸ்கால் சேவையாளர் வருடாந்தக் கூட்டம்

குரும்பசிட்டி, செவ்.
அகில இலங்கை பிஸ்கால் சேவையாளர் சங்கத்தின் 16-வது ஆண்டுப் பொதுக் கூட்டம் இம்மாதம் 14-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு கண்டி சிமாசகித சிறீ புஸ்பதான சமித்திய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. சங்கத்தலைவர் திரு. ரீ. டீ. சேரம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும், தொழிற்சங்கப் பிரமுகர்களும் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

### சென்னையில்...

[1-ம் பக்க தொடர்ச்சி]

தில் தமக்கு ஆட்சேபமில்லையென்றும் இலங்கை மக்களிடமிருந்து நிதிதிரட்டி பதினையாயிரம் ரூபாய் கொடுத்தால் நாவலர் சிலை வைக்கத் தயார் என்றும் சொன்னார். மரினா கடற்கரையில் இப்போது வைக்கப்பட்டிருக்கும் சிலைகளும் பொதுமக்கள் திரட்டிக்கொடுத்தநிதியிலிருந்தே வைக்கப்பட்டன வென்பதையும் முதலமைச்சர் எடுத்துக்கூறினார்.

### தமிழுக்கு...

[5-ம் பக்கத் தொடர்ச்]

பமாக இருந்துவந்திருக்கிறது என்று கூறினார்.

திரு. துரைமுருகன் பேசுகையில் தமிழ் மொழி பயிலாதவர்களும், தமிழ் உணர்ச்சியின் காரணமாக நாட்டில் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றார்.

திரு. க. வெள்ளைவாரணர் பேசுகையில், இலக்கிய உலகில் தமிழ்த்தாய் வாழ்த்து என்பதை முதலில் தொடங்கிவைத்துப் புரட்சி உண்டாக்கியவர் கருணைப் பிரகாசர் என்றார்.

திரு. இளமுருகு பொற்செல்வி பேசுகையில், சமயத்துறையில் பணியாற்றிய சேக்கிழார், சுந்தரருக்கும் பரவையார்க்கும் திருமணம் செய்துவைத்ததன் மூலம் கலப்புதிருமணக் கருத்தை வற்புறுத்தி புரட்சிசெய்தார் என்றார்.

### வெள்ளநிவாரண மதிப்பீடு

நெடுந்தீவு, செவ்வாய்
அண்மையில் வீசிய புயலாலும் வெள்ளப்பெருக்காலும பாதிக்கப்பட்ட வீடுகளுக்கும் அவற்றில் சேதப்படுத்தப்பட்ட பொருட்களுக்கும் நிதி நிவாரணமளிப்பதற்காக தற்போது நெடுந்தீவில் நிவாரணமதிப்பீடு அதிகாரிகள் பாதிக்கப்பட்ட வீடுகளையும் சேதங்களையும் பார்வையிட்டுவருகிறார்கள்.

பல வீடுகள் தற்போது திருத்தப்பட்ட போதிலும் விண்ணப்பக்காரரின் மதிப்பீடு, கிராமசேவையாளரின் சிபார்சு ஆகியவற்றை ஆதாரமாகக்கொண்டு தங்களின் மதிப்பீடுகளைச் செய்துவருகிறார்கள்.

நெடுந்தீவில் இம்முறை கால்நடைகளும் பயிற்செய்கைகளும் பெருவாரியாக அழிந்துள்ளன. இவற்றின் சொந்தக்காரர்கள் தாங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக பெருங்கவலை தெரிவித்துள்ளார்கள். இதேபோன்று வலைகளையும், வள்ளங்களையும், கட்டுமரங்களையும் இழந்த மீனவர்களும் தங்களுக்கும் நிவாரணமளிக்கப்படுமா இல்லையா என்ற சந்தேக நிலையில் உள்ளார்கள்.

### ஏல விற்பனை

வீட்டுத்தளபாடங்கள்:

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை றோட்டில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு எதிரேயுள்ள பங்களாவில் 1968-ம் ஆண்டு தைமாதம் 12-ந்திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 14-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைவரையும்.

S. இரத்தினசபாபதி J. P.
வெந்தீஸ்மேஸ்தர்.

402

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

### அறிவித்தல்

'ஈழநாடு' பத்திரிகையின் யாழ்ப்பாண நிருபராகவும் பின்னர் கொழும்பில் 'ஈழநாடு' விநியோகப் பிரதிநிதியாகவும் கடமையாற்றிய திரு. எஸ். திருச்செல்வம் 'ஈழநாடு' ஸ்தாபனத்திலிருந்து விலகிவிட்டார் என்பதையும் அவருக்கும் எமக்கும் எவ்வித தொடர்புமில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகி
'ஈழநாடு'

### மணிவாசகர் விழா

காரைநகர், புதன்
ஈழத்துச் சிதம்பரம் என வழங்கும் காரைநகர் சிவன் கோவில் வசந்த மண்டபத்தில் மணிவாசகர் விழா இன்றுமாலை 6 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெற இருக்கின்றது.

மதுரையாதீன செஞ்சொற்கொண்டல் தருமையாதீன வித்துவான் சொ. சிங்காரவேலன் விழாவை ஆரம்பித்து வைப்பார். அவர் தலைமையில் இன்று நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள்.

மாலை 3-00 திருவாசகத் திருமுறை ஊர்வலம், 6-00 திருவாசகத் திருமுறை ஓதல், 6-15 வரவேற்புரை திரு செ. இராசையா 6-30 மணிவிழாவை ஆரம்பித்து வைத்தல், - செஞ்சொற்கொண்டல் வித்துவான் சொ. சிங்காரவேலன், 6-75 புவனியிற் சேவடி தீண்டினன் காண்' பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி.

இரவு 7-30 அமுதடி அடைந்த அன்பர் செஞ்சொற்கொண்டல் வித்துவான்சொ. சிங்காரவேலன், 9-00 தலைவர் நிறைவுரை 9-05 திருவாசகத் திருமுறை ஓதல்.

### தரமான...

(1-ம் பக்க தொடர்ச்சி)

கொள்ளப்பட்டு வருகிறது' என்றார்.

திருமதி மகேஸ்வரி தமது கருத்தை மேலும் தெரிவிக்கையில் பிறமொழியிலிருந்து குறிப்பாக ஆங்கிலத்திலிருந்து தமிழில் சிலசொற்கள் மொழிபெயர்க்கப்படும்போது அன்றாடம் இந்த மொழிபெயர்ப்பில் ஏற்படும் சிரமங்களையும் பிரச்னைகளையும் தெளிவாக எடுத்துக்கூறியபோது பார்வையாளர்கள் வெகு உன்னிப்பாக அவற்றை அவதானித்துக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். திறைசேரியில் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றும் திருமதி மகேஸ்வரி தமக்கே ஏற்பட்ட அனுபவங்களையும் பிரச்னைகளையும் எடுத்துக் கூறினார்.

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் ஆங்கிலத்திலுள்ள சொற்களுக்கு ஏற்றதரமான தமிழ்ச்சொற்களைக் கண்டுபிடித்து சாதாரண உபயோகத்தில் ஒரே வகையான சொற்களை எல்லோரும் உபயோகிக்கத்தக்க தொரு நிலையை மொழிபெயர்ப்பு விஷயத்தில் ஏற்படுத்த வேண்டுமென்றும் இதற்கு தரமான அகராதி தயாரிக்கப்படவேண்டுமென்றும் திருமதி மகேஸ்வரி வேண்டுகோள் விடுத்தார்.

சர்வதேச தமிழாராய்ச்சிக் கழகத்தின்கீழ் தரமான அறிஞர்களைக்கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டு அகராதி தயாரிக்கும் பணியில் ஈடுபடுவது அவசியம் என்பதையும் அவர் வற்புறுத்திக் கூறினார், தரமான அகராதி தயாரிப்பதற்கு திருமதி மகேஸ்வரி மூன்று அம்சங்கள்கொண்ட யோசனையையும் வெளியிட்டார்,

திருமதி மகேஸ்வரி எடுத்துக்கூறிய அருமையான கருத்துக்களைப் பலர் வரவேற்றனர் மகாநாட்டில் இலங்கைசார்பில் பேச்சாளராகக் கலந்துகொண்ட டாக்டர் ஏச் டபிள்யு தம்பையா மற்றும் வெளிநாட்டுப் பேச்சாளர்களும் அவரின் கருத்தைப் பெரிதும் வரவேற்றனர். அவரது கருத்துக்கள் சிந்தனைக்குரியதோடு சிந்தனையைக் கவர்வனவாக இருந்தன எனவும் பாராட்டினர்.

# தேயிலை உற்பத்திக்கு கூட்டு முயற்சி

## இலங்கை-இந்திய அதிகாரிகள் முடிவு

கொழும்பு, செவ்.
தேயிலை உற்பத்தி, விநியோகம் ஆகியவை சம்பந்தமாக இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் கூட்டு நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அதிகாரிகளுக்கும் இந்திய அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று முடிவடைந்த பேச்சுவார்த்தைகளின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மேற்கொண்டும் இருநாடுகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. விரைவில் இருநாட்டு அதிகாரிகளுக்குமிடையில்பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்று தெரிகின்றது.

இலங்கையின் சார்பில் ஏழு அதிகாரிகளும் இந்தியாவின் சார்பில் 5 பேரும் இந்தப் பேச்சுகளில் கலந்துகொண்டனர்.

### 'தெய்வப் பாவை'

யாழ்ப்பாணம், புதன்
அண்ணாமலை இசைக்கலை மன்றத்தினர் இம்மாத இறுதியில் 'தெய்வப்பாவை' என்ற நாடகத்தை மேடையேற்ற இருக்கின்றனர். 'சொக்கன்' கதை வசனம் எழுதித் தயாரிக்கும் இந்நாடகம் பாண்டிமாதேவியாராம் மங்கையர்க்கரசியின் வாழ்வினைப் படம்பிடித்துக்காட்டுவதாய் உள்ளது. இயல், இசை, நடனம் யாவும் நிறைந்த சுவையானதொரு நாடகமாய் இது அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### தற்கொலை: பணமுடை காரணமாம்

இமையாணன், செவ்.
வதிரியைச் சேர்ந்த கதிர்காம சுப்பிரமணியம் என்ற 35 வயதுடையவர் நச்சுத்திராவகம் அருந்தியதால் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு மரணமானார்.

மரணவிசாரணையின்போது சாட்சியமளித்த கந்தையா செல்லையா என்பவர் 'குளறிய சத்தத்தைக் கேட்டு தான் ஓடியதாகவும், அப்பொழுது அவர் திராவகம் அருந்துவதைக்கண்டு அதை தான்பறித்ததாகவும் ஆனால் முக்கால்வாசியை அவர் அருந்திவிட்டதாகவும்' கூறினார். காலமானவரின் மனைவியான பார்வதியும் சாட்சியமளித்தார். மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையான இவருடைய தற்கொலைக்கு பணமுடை காரணம் எனக் கூறப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். இராமநாதன் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

### பெற்றோர் கவலை

நெடுந்தீவு, செவ்.
நெடுந்தீவு மகாவித்தியாலயம் சிரேஷ்டபாடசாலையாக உயர்த்தப்பட்டுள்ளதால் இதுகாலவரைக்கும் நடத்தப்பட்டுவந்த 6-ம், 7-ம் வகுப்புகள் படிப்படியாக நீக்கப்படுமாகையால் பாடசாலை மாணவர் தொகை குறைந்து ஆசிரியர்கள் எண்ணிக்கையும் குறைந்துவிடுமோ என்றும் தங்கள் பிள்ளைகளை கற்பிக்கும் விசேஷ பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடுமோ என்றும் பெற்றோர்கவலைகொண்டுள்ளார்கள்.

இது ஒருபுறமிருக்கநெடுந்தீவில் கனிஷ்ட பாடசாலைகளாகக் கணிக்கப்பட்டுள்ள சிலபாடசாலைகள் இதுவரையும் தங்கள் பாடசாலைகளில் உள்ள 8-ம்வகுப்புமாணவர்களை மாவித்தியாலயத்துக்கு அனுப்பி வைக்காததால் அவர்களும் தொடர்ந்து மேல்வகுப்புகளை வைக்கப்போவதாய் தோன்றுவதால் தொடர்ந்து மாவித்தியாலயம் பாதிக்கப்படுமெனஅஞ்சப்படுகிறது.

இதுவிஷயமாக நெடுந்தீவு மாவித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கம் கல்வி அதிகாரிகளோடுதொடர்புகொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

### ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமர்

மெல்பேர்ன், ஜன. 9
நாளையதினம் நடைபெறும் ஒரு வைபவத்தில் ஆஸ்திரேலியாவின் புதிய பிரதம மந்திரியாக செனட்டர் ஜோன் கோர்ட்டன் பதவிப்பிரமாணம் செய்துகொள்வார்.

ஆஸ்திரேலிய பிரதமர் திரு. ஹோல்ட் கடந்த மாதம் கடலில் நீந்திச் சென்று காணாமல் போனதைத் தொடர்ந்து புதிய பிரதமர் நியமனம் நடைபெறுகின்றது.

### 6 பிள்ளைகளின் தந்தைதற்கொலை

வவனியா, செவ்.
வவனியாமாவட்டத்தைச் சேர்ந்த புதுக்குடியிருப்புக் கிராமத்தில் 46 வயதுடைய ஆர். வீரன் என்பவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

6 பிள்ளைகட்குத் தந்தையான இவரின் மரணம் சம்பந்தமாக விசாரணை செய்த மரணவிசாரணை அதிகாரி திரு ஆர். வில்வராசா தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

### ஏகாதசி விரதம்

இமையாணன், புதன்
சுவர்க்கவாயில் ஏகாதசி விரதத்தையும் நித்திரை விழிப்பையும் முன்னிட்டு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவிலில் நாளை விசேட பூஜைகளும், உற்சவமும் நடைபெறும். உடுப்பிட்டி சித்ரா மெலலிசை மன்றத்தினரின் பக்திப் பாடல்கள் நிகழ்ச்சியும் முக்கிய இடம்பெறும்.

### இலங்கையில்.....

1-ம் பக்கத் தொடர்ச்சி

தும் மொழி, மத, கலாசாரம் என்றும் பேணிப் போற்றிக் காப்பாற்றப்பட வேண்டும்.

ஈழத்தில் தமிழ் கவிஞர்களும அறிஞர்களும் தமிழுக்கு ஆற்றிய அளப்பரிய பணி பற்றிக் குறிப்பிட்ட திரு. அமிர்தலிங்கம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விபுலானந்த அடிகள் ஆகியோர் தமிழுக்காற்றிய சேவையை விரித்துக் கூறினார். இவர்களுக்கு தமிழகத்தில் சிலையெடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்கள் அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org